இலங்கையின் முதல் தமிழ்க் கத்தோலிக்க வார ஏடு

# பாதுகாவலன்

PAATHUKAVALAN

Registered as a Catholic Weekly (G.P.O.197) Founded 19 Feb.1876

St.Joseph's Catholic Press, 360, Main Street, Jaffna, Sri Lanka: Tel: 021-222 2378 Fax : 021 222 9041 -E-mail: editorkavalan@gmail.com ISSN 1391-7633

மலர்: 142 இதழ் : 15 திகதி: 19.08.2018 விலை : 20.00

## மரண தண்டனை நிறைவேற்றும் சட்டத்தை அனுமதிக்க இலங்கை கத்தோலிக்க ஆயர் பேரவை மறுப்பு

இலங்கை அரசாங்கத்தினால் நிறைவேற்ற உத்தேசித்துள்ள மரண தண்டனை சட்டத்தை அனுமதிக்க இலங்கை ஆயர் பேரவை மறுப்புத் தெரிவித்துள்ளது. இது தொடர்பாக ஆயர் பேரவை அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

இலங்கை கத்தோலிக்கப் பேரவையானது மரண தண்டனையை அனுமதிக்காது தண்டனைக்கு சார்பாக இருக்காது நாட்டின் மரண தண்டனையை அமுல் படுத்துவதற்கான செயற்பாடுகள் முன்னெடுத்துச் செல்லப்படுகின்ற இத்தருணத்தில் இலங்கை கத்தோலிக்க ஆயர் பேரவையின் அங்கத்தவர்களாகிய நாங்கள் இவ்வறிக்கையை முன்வைக்கின்றோம்.

எமது திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் திருச்சபையின் கத்தோலிக்க மறைபோதகத்தில் இலக்கம் 2267 இல் புதிய மாற்றங்களைச் செய்துள்ளார். இவ்வுலகில் எம் திருத்தந்தையால் அறிவிக்கப்பட்ட விடயத்தை நாம் மீண்டும் அறியத் தருகின்றோம்.

பொதுமக்களின் வாழ்க்கையை பாதுகாப்பதற்காக தீர்ப்பிற்கு ஏற்ப சட்டத்தின் முன்னிலையில் சட்டமீறல்கள் மற்றும் சட்டப்படி கடுமையாக தண்டிக்கப்படவேண்டிய குற்றத்திற்குத்தண்டனை வழங்கவேண்டிய விதிவிலக்கான சந்தர்ப்பங்களின் போது வேறு மாற்றுவழிகள் இல்லாதிருப்பின் மரண தண்டனையை நடைமுறைப்படுத்தும் அதிகாரம் மேலதிகாரிகளுக்கு இருந்தது.

அவ்வாறான கடுமையான குற்றங்களைச் செய்துள்ள குற்றவாளியின் உண்மையான மனிதாபிமானத்திற்குக் கேடு விளைவிப்பதற்கு வாய்ப்பு உருவாகுவதில்லை என்னும் விழிப்புணர்வுடன் இருக்கின்றதை நாம் ஏற்றுக்கொள்கின்றோம். அத்துடன் சட்டதிட்டங்களை மீறும்போது வழங்கப்படும் தண்டனைகள் குறித்து புதிய எண்ணக்கருக்கள் உருவாகியுள்ளன.

மேலும் நாட்டின் பிரஜைகளுக்குத் தகுந்த பாதுகாப்பை வழங்குவதற்கான தேவைப்பாடு அதிகரித்துள்ளதுடன், குற்றவாளிகளுக்குத் தம் குற்றத்தை உணர்ந்து மனம் திரும்பி வாழ்வை மாற்றிக் கொண்டு விடுதலை பெற்று நல்வழிக்குச் சென்று வாழ்வதற்கான முக்கியத்துவமும் வாய்ப்பும் அத்தியாவசியமான விடயம் என்பதையும் குறிப்பிடுவது அவசியமானதாகும். (தொடர்ச்சி 12ம் பக்கம்)

### இலங்கையின் கரித்தாஸ் நிறுவனத்தின் பொன்விழா நிகழ்வுகள் யாழ்ப்பாணத்தில்

இலங்கை கரித்தாஸ் (செடெக்) நிறுவனத்தின் 50 ஆவது வருட நிறைவையொட்டிய பொன்விழா நிகழ்வுகள் இவ்வருடம் கார்த்திகை மாதம் 29 ஆம் திகதி "இறைவனின் அன்பு எல்லோருக்கும் உரியது" என்ற கருப்பொருளுடன் யாழ்ப்பாணத்தில் வெகு சிறப்பாக நடைபெறவுள்ளது.

இப்பொன்விழா நிகழ்வானது இலங்கையின் அனைத்து மறைமாவட்ட நடுநிலையங்களை உள்ளடக்கிய பாதை யாத்திரையுடன் ஆரம்பமாகவுள்ளது.

இதன் முதற்கட்டமாக யாழ்ப்பாணம் கியூடெக்... (தொடர்ச்சி 11ம் பக்கம் )

### நீர்வேலி பரலோக மாதா ஆலய மரியாயின் சேனை பிரசீடிய 54 ஆவது ஆண்டு நிறைவு விழா



நீர்வேலி பரலோக மாதா ஆலய "சமாதானத்தின் இராக்கினி" மரியாயின் சேனை பிரசீடிய 54ஆவது ஆண்டு நிறைவு விழா அண்மையில் இடம்பெற்றது. பங்குத்தந்தை அருட்பணி ம.பத்திநாதர் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் யாழ் மறைமாவட்ட ஆன்மீக இயக்குநர் அருட்பணி ம.றெஜிராஜேஸ்வரன் அடிகளால் திருப்பலி ஒப்புக்கொடுத்ததுடன் அருட்பணி அமல்ராஜ் அடிகளார் கருத்துரை வழங்கினார். (தொடர்ச்சி 11ம் பக்கம்)

## குடும்பங்களும், புதிதாக இல்லறத்தில் இணைவோரும் தமது மாண்பைப் பேணவேண்டும்

### யாழ் மரியன்னை பேராலயப் பெருவிழாவில் யாழ் ஆயர்



குடும்பங்களும், புதிதாக இல்லறத்தில் இணைவோரும் தமது மாண்பைப் பேணவேண்டும் என யாழ் புனித மரியன்னை பேராலயப் பெருவிழாவில் யாழ் ஆயர் பேரருட்கலாநிதி யஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகை அவர்கள் கேட்டுள்ளார்.

யாழ் புனித மரியன்னை பேராலயப் பெருவிழா மரியன்னையின் விண்ணேற்பு நாளான 15.08.2018 அன்று காலை யாழ் ஆயர் தலைமையில் கூட்டுத் திருப்பலியுடன் சிறப்பாக நடைபெற்றது. இதன்போதே யாழ் ஆயர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ஆயர் தனது மறையுரையில் புனித மரியாளை முன்மாதிரியாகக் கொண்டு இன்றைய குடும்பங்களும் புதிதாக இல்லறத்தில் இணை வோரும் தமது மாண்பைப் பேணவேண்டும். (தொடர்ச்சி 11ம் பக்கம்)

## நாட்டில் நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் இணைப்புப் பாலமாக மடு அன்னை திகழ்கின்றார்

### பிரதமர் ரணில் விக்கிரமசிங்க



நாட்டில் நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் இணைப்புப் பாலமாக மடு அன்னை திகழ்வாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அவர்கள் மடுத் திருவிழாத் திருப்பலி நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போது தெரிவித்தார்.

தமிழ் சிங்கள மக்கள் மத்தியில் ஒற்றுமையையும், புரிந்துணர்வையும் ஏற்படுத்தும் திருத்தலமாக மடு அன்னை திருத்தலம் விளங்குவதாகவும், மடு அன்னை இந்த நாட்டில் உள்ள மக்கள் அனைவருக்கும் ஒரு தாயாக நின்று அனைவரையும் அன்பால் இணைத்து வருவதாகவும் குறிப்பிட்ட பிரதமர் அவர்கள் நாட்டில் தொடர்ந்தும் நல்லாட்சி நிலைத்திருக்கவும் நல்லிணக்கம் ஏற்படுவதற்கும் இத்தகைய திருவிழாக்கள் பங்களிப்புச் செய்வதாகவும் எல்லோரும் ஒன்றுகூடி ஒரே இலங்கையர் என்ற குடையின் கீழ் எதிர்காலத்தை கட்டியெழுப்பவேண்டும் எனவும் கேட்டுக்கொண்டார். (தொடர்ச்சி 11ம் பக்கம்)

## மடு மாதா திருத்தலத்தில் சிறப்புற நடைபெற்ற புனித மரியாளின் விண்ணேற்புப் பெருவிழா





மடுமாதா திருத்தலத்தில் புனித மரியாளின் விண்ணேற்புப் பெருவிழா 15.08.2018 அன்று புதன்கிழமை காலை 6.30 மணிக்கு கூட்டுத் திருப்பலியுடன் வெகு சிறப்பாக நடைபெற்றது.

மன்னார் மறை மாவட்ட ஆயர் பேரருட்கலாநிதி இம்மானுவேல் பெர்னாண்டோ அவர்களின் அழைப்பின் பேரில் கொழும்பு மறைமாவட்டப் பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை தலைமையில் மறை மாவட்ட ஆயர்கள் இணைந்து திருநாள் திருப்பலியை கூட்டுத்திருப்பலியாக ஒப்புக்கொடுத்தனர்.

திருவிழாத் திருப்பலியைத் தொடர்ந்து அன்னையின் திருச்சொரூபப் பவனியும், திருச்சொரூப ஆசி யும் வழங்கப்பட்டது. இம்முறை இப்பெருவிழாவில் ஐந்து இலட்சத்துக்கும் மேற்பட்ட பக்தர்கள் கலந்துகொண்டனர். தலைமை அமைச்சர் கௌரவ ரணில் விக்கிரமசிங்க மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் எனப் பலரும் கலந்து கொண்டு அன்னையின் ஆசியை வேண்டி நின்றனர்.

ஆண்டவர் நகரைக் காக்கவில்லையெனில், காவலர்கள் விழித்திருப்பதும் வீணாகும். (தி.பா:127:1)

# எமது எண்ணம்

## என்ன செய்யப் போகிறோம்?

**கல்வியைக் கண் என்றார்கள்**
**உண்மைதான் அதற்கிங்கே**
**அறுவைச் சிகிச்சை அவசியமாய் உள்ளது**

என ஒரு கவிஞன் கூறினான். இன்றைய கல்வி நிலையை எடுத்துக்காட்டுகின்ற கவிதை வரிகளாக இவை அமைந்துள்ளன. இன்று பூக்களை மிதித்துக்கொண்டு கிளைகளுக்கு வர்ணம் பூசும் ஒருவகைக் கல்வியே நம் இளைய தலைமுறையினருக்கு வழங்கப்படுகின்றது இல்லை திணிக்கப்படுகின்றது என்று கூறலாம்.

இலங்கையில் இன்று நடைமுறையில் உள்ள கல்விக் கொள்கை வெறும் பரீட்சையை நோக்கியதாக ஏட்டுக்கல்வியில் நிலைகொண்டுள்ளது. தரம் 05 புலமைப்பரிசில் பரீட்சை, க.பொ.த.சாதாரணதரப் பரீட்சை, க.பொ.த உயர்தரப் பரீட்சை என மூன்று களங்களை எமது வருங்கால சந்ததி கண்டு வருகிறது.

க.பொ.த. உயர்தரப் பரீட்சை தற்போது நிறைவுபெறும் தறுவாயில் உள்ளது. அடுத்து நாம் என்ன செய்யப போகிறோம் என மாணவர்களும், எம் பிள்ளைகளின் எதிர்காலம் எவ்வாறு அமையப்போகிறது எனப் பெற்றோர்களும், எத்தனை மாணவர்களுக்கு 3 ஏ வரும் என பாடசாலைகளும் அங்கலாய்த்து நிற்கும் வேளை இது.

க.பொ.த உயர்தரப் பரீட்சைக்கு தோற்றுகின்ற மாணவர்களில் 20 சதவீதத்தினர் பல்கலைக்கழகங்களுக்கும், 25 சதவீதத்தினர் கல்வியியற் கல்லூரிகளுக்கும் பிரவேசிக்க மிகுதி மாணவர்கள் செய்வதறியாது திகைத்து நிற்கும் நிலை எமது பிரதேசங்களில் காணப்படுகின்றது. படித்தவர்கள் எல்லோரும் பட்டதாரிகள் ஆகமுடியாது. பட்டதாரிகள் எல்லோருக்கும் வேலை வாய்ப்பு இலகுவில் கிடைத்துவிட முடியாது. மருத்துவம், பொறியியல், முகாமைத்துவம், கலை இவைதான் கல்வியின் உயர் நிலை, இவற்றைத்தான் எமது பிள்ளைகள் பெற்றுக்கொள்ள வேண்டும் எனப் பெற்றோர்கள் ஒரு வகையான வரட்டுக் கௌரவங்களுடன் தம் பிள்ளைகளை வழிநடத்தி வருவதைக் காணமுடிகின்றது. இதனை வழிநடத்துதல் எனக் கூறுவதற்குப் பதிலாக இம்சைப்படுத்துதல் எனக் கூறுவது பொருத்தமானது.

ஒவ்வொரு பிள்ளைக்கும் தான் விரும்பிய துறையில் கற்க, தான் விரும்பிய துறையில் பணி செய்ய உரிமையும், சுதந்திரமும் உண்டு என்பதை பெரும்பலான சந்தர்ப்பங்களில் பெற்றோர்கள், ஆசிரியர்கள், பாதுகாவலர்கள் மறந்துவிடுகின்றனர்.

அண்மைக்காலங்களில் கணித, விஞ்ஞான, கலை வர்த்தகப் பிரிவுகளுடன் க.பொ.த உயர்தரத்தில் தொழில்நுட்பப் பிரிவுகளும் சேர்க்கப்பட்டு, வருங்கால சந்ததியை தொழில்நுட்பத் துறையில் ஊக்குவிக்க இலங்கை அரசாங்கம் எடுத்த முயற்சி பாராட்டத்தக்க ஒரு விடயமாகும். இத்தகைய தொழில்நுட்பத் துறையில் மாணவர்கள் கால்பதிப்பதன் ஊடாக ஒவ்வொரு மாணவனும் தனது எதிர்காலத்தை ஏதோ ஒரு வகையில் திட்டமிடுவதற்கு வழிவகை செய்யப்பட்டுள்ளது. ஏட்டுக்கல்வியைக் கற்று பரீட்சைக்காக சப்பப்பட்ட விடயங்கள் பரீட்சையில் துப்பப்பட்டபின் வாழ்க்கை சூனியமாகி விடுகின்றது எனில் இந்தக் கல்வியால் என்ன பயன்?

"தீமையின் பகுத்தறிவாக்கமே நவீனகாலத்தின் கல்விமுறை" என நமது கல்விமுறையை அல்பேட் நோலன்ட் கடுமையாக விமர்சிக்கின்றார். பிறேசில் நாட்டைச் சேர்ந்த கல்வியியலாளர் பவுலோ ஃப்ரெய்ரோ ஏட்டுக்கல்வியை ஒழித்து வாழ்க்கைக் கல்வியை கற்றுக்கொடுக்கும் இடமாக பாடசாலைகள் மாறவேண்டும் எனக் குறிப்பிடுகின்றார். ஒரு நிலையிலிருந்து அடுத்த நிலைக்கு உயர்த்தும் வளர்ச்சிதான் இன்றைய கல்வியின் நோக்கமாக இருக்கவேண்டும். ஏற்கனவே கால்பதித்த இடத்திலிருந்து பின்நோக்கிச் செல்வது ஒருபோதும் முன்னேற்றமாகி விடாது.

நமது தலைமுறைக்கு நவீன தொழில்நுட்பத்தின் ஊடாக கற்றுக்கொள்ளக்கூடிய ஏராளமான கற்கை நெறிகளும், கைநிறைய சம்பாதிக்கக்கூடிய வழிமுறைகளும் பரந்து கிடக்கின்றன. இவற்றை நாம் பார்க்க மறுக்கின்றோம், ஒதுக்குகின்றோம். எம் கண்களுக்குத் வைத்தியர், பொறியியலாளர், கணக்காளர், வங்கியியலாளர், ஆசிரியர்கள், சட்டத்தரணிகள் போன்றவர்கள் மாத்திரமே தெரிகின்றனர்.

கிணற்றுத் தவளைகளாக ஒரு வட்டத்திற்குள் நின்று குறிப்பிட்ட பதவிகளுக்கு மாத்திரம் எம் பிள்ளைகளைத் தயார்படுத்தும் இந்த நிலை மாறவேண்டும்.

கல்வியில் ஏற்படும் பின்னடைவுகளே பல இளைய தலைமுறையினரின் விரக்திக்குக் காரணமாகிறது. பரீட்சை முடிவுகள் வெளிவந்தவுடனே எம் பிரதேசங்களில் நடைபெறுகின்ற தற்கொலை முயற்சிகள் இதற்கு தக்க சான்றாகும். மேலும் கல்வி விரக்தியினாலேயே போதைப்பொருள், பாலியல் பிரச்சினைகள் போன்ற பல சமூகவிரோதச் செயல்கள் இளைய தலைமுறையினரால் அரங்கேற்றப்பட்டு வருகின்றது. இந்நிலையில் வாழ்க்கையை வளப்படுத்தும் வளமான வாழ்க்கைக் கல்விகளை எம் இளைய தலைமுறையினருக்கு வழங்கவேண்டியது கல்வி உலகத்திற்கு மட்டுமல்ல, பெற்றோர்கள், பெரியோர்கள் அனைவருக்கும் உள்ள தார்மீகக் கடமையாகும். செருப்புக்கு அளவாக காலைக் குறைக்காமல் காலுக்கு அளவாக செருப்பைத் தேடுவதே புத்திசாலித்தனம்.

அருட்பணி.எஸ்.எயின்சிலி றொஷான்

# திருப்பீட செயலகத்திற்கு புதிய நேரடிப் பொதுச்செயலர்

திருப்பீட செயலகத்தின் புதிய நேரடிப் பொதுச் செயலராக வெனெசுவேலா நாட்டைச் சேர்ந்த பேராயர் Edgar Peña Parra அவர்கள்நியமிக்கப்பட்டுள்ளார். இவர் பாகிஸ்தானில் திருப்பீடத் தூதரகத்தில் பல ஆண்டுகள் பணியாற்றியுள்ளார்

ஒக்டோபர் 15 ஆம் திகதியன்று இப்பொறுப்பை ஏற்கவுள்ள பேராயர் Peña Parra அவர்கள் தற்போது ஆபிரிக்காவின் மொசாம்பிக் நாட்டில் திருப்பீடத் தூதராகப் பணியாற்றி வருகிறார்.

இதற்குமுன் திருப்பீட செயலகத்தின் பொது விவகாரத்துறையின் நேரடிப் பொதுச்செயலராக, கர்தினால் ஆஞ்சலோ பெச்சு அவர்கள் 2011ம் ஆண்டு மே 10ம் திகதி முதல் 2018ம் ஆண்டு ஜூன் 29ஆம் திகதி வரை பணியாற்றினார்.

பேராயர் Peña Parra அவர்கள் இஸ்பானியம், இத்தாலியம், ஆங்கிலம், ப்ரெஞ்ச், போர்த்துக்கீசியம், செர்பிய-குரோவேஷியம் ஆகிய மொழிகளில் வல்லுநராவார்.

# இருளையும் மரணத்தையும் வெல்லும் வல்லமையை கிறிஸ்து நமக்குத் தந்துள்ளார்

## திருத்தந்தை

இளையோர் தாங்கள் மேற்கொள்ளும் வாழ்வுப் பயணத்தில்துணிவுடன்பயணிக்கவேண்டும் எனவும், இருளில் சிக்கியிருப்போரை ஒளிக்குக் கொண்டு வரவேண்டும் எனவும் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் இளையோரைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

ஒகஸ்ட் 11 சனிக்கிழமை உரோம் நகரில் கூடியிருந்த 70,000 இற்கும் அதிகமான இளையோரை சிர்கோ மாஸ்ஸிமோ திடலில் மாலை 5 மணியளவில் சந்தித்த திருத்தந்தை அன்பு, மகிழ்வு, மற்றும் நம்பிக்கை நிறைந்த உள்ளத்துடன் இளையோர் இயேசுவை நோக்கி ஓடவேண்டும் என்று கூறினார்.

துன்பம், தோல்வி மற்றும் மரணத்தைக் கண்டு கிறிஸ்தவர்கள் விலகி ஓடக்கூடாது என்று கூறியத் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் இவ்வுலகின் மிகப்பெரும் கொடுமை என்று கருதப்படும் மரணத்தை இயேசு வெற்றிகொண்டதை எப்போதும் நினைவில் கொள்ள வேண்டும் என்று வலியுறுத்தினார்.

இருளும், மரணமும் இன்றைய உலகில் எங்கும் பரவியிருப்பதைப் போன்று தோன்றினாலும், அவற்றை வெல்வதற்குத் தேவையான சக்தியை உயிர்த்த கிறிஸ்து நம் ஒவ்வொருவருக்கும் வழங்கியுள்ளார் என்பதை இளையோர், இவ்வுலகிற்கு பறைசாற்றக் கடமைப்பட்டுள்ளனர் எனவும் திருத்தந்தை எடுத்துரைத்தார்.

# அன்னை மரியே, விசுவாச வாழ்வை எமக்குக் கற்றுத்தாரும்



அன்னை மரியா உடலோடும், ஆன்மாவோடும் விண்ணகத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டார் என்பதை விசுவாசப் பேருண்மையாக திருத்தந்தை 12ம் பத்திநாதர் அவர்கள் 1950ம் ஆண்டில் அறிவித்தார்

மரியே, இரக்கத்தின் அன்னையே எப்போதும் எம் அருகில் இருக்கும் நீர் விசுவாசத்தை எவ்வாறு வாழ்வது மற்றும் அதை எவ்வாறு கொண்டிருப்பது என்பது பற்றி எமக்குக் கற்றுத்தாரும் என்ற சொற்களை மரியின் விண்ணேற்பு விழாவாகிய ஆகஸ்ட் 15 தன் டுவிட்டரில் திருத்தந்தை பிரான்சிஸ் வெளியிட்டுள்ளார்.

தமஸ்கு நகர் புனித ஜான் அவர்களின் கூற்றுப்படி, கி.பி. 451ம் ஆண்டில் நடைபெற்ற கால்செதோன் பொதுச்சங்கத்தில் உரோமைப் பேரரசர் மார்சியன் அவர்கள் இறைவனின் அன்னையாகிய மரியின் உடலைக் கேட்டார் எனவும், அதற்குப் பதிலளித்த எருசலேம் ஆயர் புனித ஜூவெனல் அவர்கள் எல்லாத் திருத்தூதர்களும் சூழ்ந்திருக்க மரியா இறந்தார். பின்னர் ஒருநாள் புனித தோமையாரின் வேண்டுகோளின்பேரில் மரியாவின் கல்லறையைத் திறந்தனர். அப்போது கல்லறை காலியாக இருந்தது. இதனால் மரியாவின் உடல் விண்ணகத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டது என்ற முடிவுக்கு திருத்தூதர்கள் வந்தனர் எனக் கூறினார் எனவும் தெரிய வருகிறது.

1950ம் ஆண்டு நவம்பர் முதல் திகதி திருத்தந்தை 12 ஆம் பத்திநாதர் அவர்கள் Munificentissimus Deus எனப்படும் திருத்தூது கொள்கைவிளக்கத்தின் வழியாக அன்னை மரியின் விண்ணேற்பை விசுவாசப் பேருண்மையாக அறிவித்தார்.

அன்னை மரியின் விண்ணேற்பு விழா பல நாடுகளில் பெரிய விழாவாகவும், அரசு விடுமுறை நாளாகவும் கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது.

Munificentissimus Deus எனப்படும் திருத்தூது கொள்கை விளக்கத்தின் வழியாக அன்னை மரியின் விண்ணேற்பை விசுவாசப் பேருண்மையாக அறிவித்தார்.

# உலகில் துன்புறும் அனைவருக்கும் மரியன்னை ஆறுதலும் அமைதியும் அளிப்பார்

உலகின் பல பகுதிகளில் உடலிலும், உள்ளத்திலும் கடுந்துயரங்களை அனுபவிப்பவர்களை அன்னை மரியிடம் அர்ப்பணித்து திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் செபித்துள்ளார்.

மரியின் விண்ணேற்பு விழாவாகிய ஆகஸ்ட் 15 புதன்கிழமை நண்பகல் வத்திக்கான் புனித பேதுரு வளாகத்தில் கூடியிருந்த ஆயிரக்கணக்கான மக்களுக்கு மூவேளை செப உரை வழங்கிய பின்னர் ஜெனோவா நகரில் பாலம் இடிந்து விழுந்த விபத்தில் உயிரிழந்தோர் மற்றும் காயமடைந்தோருக்காகவும் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் செபித்தார்.

உலகில் துன்புறும் அனைவருக்கும் நம் விண்ணக அன்னை ஆறுதலும், துணிச்சலும், அமைதியும் தர வேண்டுமெனச் செபிப்போம் என உரைத்த திருத்தந்தை உலகில் பல்வேறு துன்பங்களை அனுபவிக்கும் மக்கள் எல்லோரையும் இந்நேரத்தில் சிறப்பாக நினைவு கூருகிறேன் என்று கூறினார்.

பின்னர் எலலோருடனும் சேர்ந்து இவர்களுக்காக, அருள் நிறைந்த மரியே என்ற செபத்தை திருத்தந்தை பிரான்சிஸ் செபித்தார்,

# பிட்கப்பட்டு பகிரப்பட வேண்டியது கிறிஸ்தவ வாழ்வு



திருநற்கருணையைப் போல், நம் வாழ்வும் உடைக்கப்பட்டு பிறருடன் பகிரப்பட வேண்டும் என திருத்தந்தை பிரான்சிஸ் அழைப்பு விடுத்துள்ளார். திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் வெளியிட்டுள்ள டுவிட்டர் செய்தியில், 'திருநற்கருணை எனும் கொடைக்கு நன்றி சொல்வோம், நம் வாழ்வும் உடைக்கப்பட்டு நம் சகோதர சகோதரிகளுக்கு பயனுடையதாக பகிரப்பட வேண்டும்' என அழைப்பு விடுத்துள்ளார்.

# ஆன்மீகமே தலைமைத்துவத்தின் அடித்தளம்

உலகம் போற்றும் தலைவர் மகாத்மா காந்தி மறைந்து இன்று எழுபது ஆண்டுகள் கடந்த நிலையிலும் அவருடைய ஆளுமை, இலட்சியங்கள், கோட்பாடுகள் மறையவுமில்லை மங்கவுமில்லை. இன்னும் உயிரோட்டம் உள்ளதாகவே இருக்கின்றன. சமயத் தலைவர்களுக்கு ஆன்மீகமே அடித்தளம் என்று சொல்ல அவசியமில்லை. ஆனால் அரசியல் தலைவர்களுக்கும் அது அவ்வாறு அமையவேண்டுமென்று சொல்லமுடியுமா? ஆனாலும் காந்தியடிகள் தன் அரசியல் செயற்பாடுகளுக்கு எல்லாம் ஆன்மீகம் தான் வழிகாட்டி என்று வெறும் கொள்கையில் மட்டுமல்ல செயற்பாடுகளிலும் நிரூபித்திருக்கிறார். தலைமைத்துவப்பணி இன்னும் குறிப்பாக அரச தலைமைத்துவ பொறுப்பில் உள்ளவர்களுக்கு நல்ல கல்வியறிவு, நிர்வாகத் திறமை, அரசியல் அனுபவம், இவைதான் இன்றியமையாதவை என்று பலரும் கருதும்வேளை, காந்தியடிகளின் சிந்தனை மாறுபட்டதாக இருக்கின்றது. "ஆன்மீக வளர்ச்சியே எனது அரசியல் வாழ்வுக்கு அத்திவாரமாக, அரணாக விளங்குகின்றது" என்று உறுதியாக் எடுத்தியம்பினார்.

தலைமைத்துவப் பதவி வகிக்கிறவர்களில் காணப்படுகிற முக்கிய இழுக்கு ஒன்று ஆணவம். தங்களை அப்பழுக்கற்ற பெரும் உத்தமர் என்று காட்டிக்கொள்ள முயற்சிப்பது, தங்கள் பலவீனங்களை அறியாமலிருப்பது அல்லது மூடிமறைப்பது, பிறருடைய குற்றங்களை, பலவீனங்களை மிகைப்படுத்தும் அதேவேளை தங்களையே உள்நோக்கி ஊடுருவிப்பார்க்காமை. தங்கள் சிந்தனை செயற்பாடுகளை சுயவிமர்சனம் செய்யும் மனப்பக்குவம் அற்றிருத்தல். காந்தியடிகள் இவையனைத்திலும் தனது தியானப் பயிற்சியின் வழியாக நன்கு பயிற்றப்பட்டவராகக் காணப்பட்டார். தன்னை உணர்ந்தவராகத் திகழ்ந்தார்.

"என்னைப் பலர் பெரிய உத்தமர் என்று எண்ணுகின்றனர். நானோ என்றும் எனது பலவீனங்களை உணர்ந்தவனாக இருக்கின்றேன். அதை உணர்வதில்தான் எனது



பலம் விளங்குகின்றது. ஏனெனில் தன் பலவீனங்களை மனிதன் பெரும்பாலும் ஏற்றுக்கொள்ள மறுக்கிறான்" எனக் கூறினார். மக்களின் நன்றி பாராட்டுக்களையோ, பத்திரிகை விளம்பரங்களையோ என்றும் எதிர்பார்த்து அவர் பணிசெய்யவில்லை. மக்களின் உரிமைகளுக்கான எல்லாப் போராட்டங்களுக்கும் கிறிஸ்துவின் மலைப்பொழிவையும், பகவத்கீதையின் படிப்பினைகளையும் முன்னிலைப்படுத்திச் செயற்பட்டார்.

"கடமைகளைச் செய்வதே உன் கடமையும் உரிமையுமாகும். செய்யும் வேலையின் பிரதிபலன்கள் உன்னைச் சார்ந்தது அல்ல. பலன்களை மனதில் வைத்து பணிசெய்வது ஏற்புடையது மல்ல. வெற்றியோ தோல்வியோ எதையும் சம நிலையோடு ஏற்று கடமையைச் செய்வதே யோக நிலையாகும். இப்படி செய்வதனால் மனம் தூய்மை அடைகிறது, உள்ளமும் அமைதி பெறுகிறது" என்ற ஆழ்ந்த ஆன்மீக தத்துவங்களை

**அருட்பணி ஜே.திருச்செல்வம் (அமதி)**

முன்வைத்தார். (பகவத்கீதை. 2.47,48.5.11).

பல்வேறுபட்ட உயர் தலைமைத்துவப் பொறுப்பில் உள்ளவர்களுக்கு மட்டுமல்ல சமுதாயத்தில் வெவ்வேறு மட்டங்களில் குடும்ப, சமூக, ஆன்மீக மேம்பாட்டிற்கான பணிகளில் ஈடுபடுவர்கள் அனைவருக்கும் மேற் சொல்லப்பட்ட மனோபாவம், குணாதிசயங்கள் இன்றியமையாதவையே. இந்தப் படிப்பினைகளை பலநூற்றாண்டுகளுக்கு முன்னரே நற்செய்தியில் இயேசு கோடிட்டுக் காட்டிகிறார்.

நீங்களும் உங்களுக்கு பணிக்கப்பட்ட யாவற்றையும் செய்தபின், 'நாங்கள் பயனற்ற பணியாளர்கள், எங்கள் கடமையயைத்தான் செய்தோம் எனச் சொல்லுங்கள்" இன்று சமுதாயத்தின் பல்வேறு மட்டங்களில் கடமைகளை அர்ப்பணிப்புடன் செய்யும் ஊழியர்கள் எத்தனை பேர்? கடமைகளைச் செய்வதைவிட எவ்வளவு உரிமைகளைப் பெறலாம், எவ்வளவற்றை ஆதாயமாக்கிக் கொள்ளலாம் என்று கனவுகாண்பவர்கள் எத்தனை பேர்? நாடு, சமூகத்தை வளமுறச்செய்ய என்ன செய்யலாம் என்று திட்டம் தீட்டுவதை விட நாட்டை எப்படிச் சுரண்டலாம் என்ற சிந்தனையில் மூழ்கியிருப்பவர்கள் எத்தனை பேர்?

"கடமையைச் செய்வது புனிதமாகும். அதுவும் அர்ப்பணிப்புடன் நிறைவேற்றும் பணி இறைவனுக்கு உகந்த பெரும் வழிபாடாகும்" எனமொழிந்தார் விவேகானந்தர். "உங்களுள் முதன்மையானவராக இருக்க விரும்புகிறவர் உங்களுக்கு பணியாளராக இருக்கட்டும்" (லூக். 17.10).

"உங்களுள் பெரியவர் சிறியவராவும் ஆட்சிபுரிபவர் தொண்டுபுரிபவராகவும் மாறவேண்டும்." (லூக்: 22.26) நம்பெருமான் இயேசுவும், உலகம் போற்றும் தலைவர்களும் விட்டுச்சென்ற அரிய போதனைகள், முன்மாதிரிகைகள் நம் செயற்பாடுளில் பரிணமிக்கும் பொழுது நம் குடும்பங்கள், சமுதாயம், திருஅவை எவ்வித மறுமலர்ச்சியடையும்? அநீதிகள், அக்கிரமங்கள் ஒழியும். இணக்கப்பாடு, சமாதானம் நிலவும். ஆகவே இத்தகையதொரு ஆன்மீகத்தை, பிறர்நலம் பேணும் அர்ப்பணிப்புள்ள தலைமைத்துவப் பண்புகளை நாமும் நம் அன்றாட வாழ்வில் உருவாக்கிக்கொள்வோமா?

# என்னை யாரும் அன்பு செய்யவில்லை



அன்பு என்ற வார்த்தை ஆழமானது. பல அர்த்தங்கள் நிறைந்தது. உலகில் வாழும் ஒவ்வொரு உயிரினங்களும் இந்த அன்பை சுவைத்தும் அனுபவித்தும் வாழ்கின்றன.

மானிட வாழ்வில் அன்பு என்ற பண்பு கருவறை தொடங்கி கல்லறைவரை தொடரப்பட வேண்டியவை. அன்பு தான் வாழ்க்கை என்னும் வண்டியின் கடையாணி. அன்பு முறிந்துவிட்டால் வாழ்க்கை முடிவை அடைந்துவிடும் எனவே தான் "அன்பு தான் இன்ப ஊற்று அன்பு தான் உலக மகா சக்தி" என்று அன்பின் மேன்மையை பல அறிவியல் நூல்களும் ஆன்மீகவாதிகளும் போற்றுகின்றனர். இதையே வள்ளுவர்

"அன்புஈனும் ஆர்வம் உடைமை அதுஈனும்
நண்பென்னும் நாடாச் சிறப்பு"

குறள் 74ல் கூறுகிறார். அதாவது அன்பு பிறரிடம் விருப்பம் உடையவராக வாழும் தன்மையை தரும். அது எல்லோரின் இடத்திலும் நட்பு என்று சொல்லப்படும் அளவற்ற சிறப்பை தரும்.

எனவே தான் கள்வனை கரையவைப்பதும் அன்பே கடவுளுடன் இணைய வைப்பதும் அன்பே என்று கூறப்படுகின்றது. இந்த பூமியில் பிறக்கும் ஒவ்வொரு மானிட உயிரும் அன்பு செய்யவும், அன்பு செய்யப்படவும் விரும்புகின்றார்கள். இதனையே "ஹரிஸ்ராக் சல்லிவன்" எனும் உளவியலாளர் பின்வருமாறு கூறுகின்றார்.

**"தன் நிறைவையும் பாதுகாப்பையும் போல இன்னொருவரின் நிறைவும் பாதுகாப்பும் ஒருவருக்கு முக்கியமாகும் போது அங்கு அன்பு நிலவுகின்றது"**

இன்று அன்பு என்ற புனித பண்பு மனித மனங்களில் மறைந்து கொண்டு செல்கிறது. பலருக்கு தாயின் அன்பு தரமிழந்து போகின்றது. சிலரின் கணவன் மனைவி உறவில் விரிசல் அதிகரிக்கின்றது, பல குடும்பங்களின் சகோதர உறவுகளில் விரிசல் தோன்றுகின்றது. மதவாதி அன்பை இழக்கும் போது மதக்கலவரம் தலைவிரித்தாடுகிறது. அரசியல்வாதி அன்பை இழக்கும் போது பொருளாதார சீர்கேடு தாளம் போடுகிறது.

இல்லறவாசி அன்பை இழக்கும் போது இல்லறம் இல்லாமல் போகின்றது. சமுதாயம் அன்பை இழக்கும் போது இதயமற்ற உடலைப் போல் ஆகின்றது. ஒரு இளைஞன்

**அருட்பணி.ம.நிர்மலராஜ் செ.தா**

தூக்குத் தண்டனைக்காக காத்திருந்தான். ஒரு குருவானவர் அவனை சிறைச்சாலையில் சந்தித்தார். அப்போது கரத்தை நீட்டி தோளில் அன்புடன் தட்டினார். அந்த நிகழ்ச்சியால் தொடப்பட்ட இளைஞன் கண்களில் கண்ணீருடன் மெதுவான குரலில் "தந்தையே இதைப்போல யாராவது தோளில் கைவைத்து என்மீது அக்கறை காட்டியிருந்தால் நான் இங்கே வந்திருக்கவே மாட்டேன். ஒருவருக்கும் என்மீது அக்கறையும் இல்லை. ஒருவருக்கும் என்னை அன்பு செய்ய பிடிக்கவும் இல்லை" என்றான். இன்று பலரின் வாழ்வில் என்னை யாரும் அன்பு செய்யவில்லை என்ற மன ஆதங்கம், போராட்டம் நாளாந்த வாழ்க்கையை சீர்குலைக்கின்றது.

அன்பு புனிதமானது. தன்னலமற்றது, தியாகம் நிறைந்தது. அன்பின் சுவையை அறிவாற்றலால் அளந்து விட முடியாது. மாறாக உணர்வலைகளால் அனுபவிக்க முடியும். அன்பின் ஆழம் 1 கொரிந்தியர் 13: 4 - 13 என்ற வார்த்தைகளில் மனித வாழ்வின் அன்பின் தன்மையும், எதிர்பார்ப்பும் மிகவும் ஆழமாக கூறப்பட்டுள்ளது. அன்பே கடவுள். அன்பின்றி கடவுளை நீ அறியவும், உணரவும் முடியாது. எங்கு நீ உண்மை அன்பை உன் உறவுகளில் காண்பாயோ அங்கு இறைவன் இருப்பார்.

# அன்பு உன் பலவீனமாகட்டும்

"அன்பு தான் உன் பலவீனம் என்றால் இந்த உலகில் மிகச் சிறந்த பலசாலி நீ தான்" என்றார் அன்னை திரேசா. அன்பு என்பது உலக மொழி. அன்பு என்பது சொற்களில் வாழ்வதில்லை. அன்பை சொற்களால் விளக்கவும் முடியாது. ஆனால், அதை நாம் எளிதில் வெளிப்படுத்தலாம், எளிதில் புரிந்து கொள்ளலாம், ஏனென்றால் அன்புக்கு முடிவே இராது. சிலர் அன்பை வார்த்தைகளால் வெளிப்படுத்துவர். சிலர் உணர்வுகளால் வெளி படுத்துவர். அன்பு மனிதத்தின் ஆடம்பரமல்ல. அவை மனித குலத்தின் அடிப்படைத் தேவை. உலகத்தில் மிக மலிவான பொருளும் அன்புதான். ஆம்! வாழ்க்கைப் படகை கரையோடு பிணைத்துவைக்க அன்பு மட்டுமே ஆதாரக் கயிறாக இருக்கிறது.



அன்பைப் பிறருக்கு வழங்குவோம், பிறரின் அன்பைப் பெறுவோம். அன்பே நம் பலவீனமாகட்டும்.

மதங்கள் அனைத்தும் "அன்பே கடவுள் என்றுதான் போதிக்கின்றன". தன் நண்பர்களுக்காக உயிரைக் கொடுப்பதை விட மேலான அன்பு உலகில் எவரிடத்திலும் இல்லை யென கிறிஸ்து இயேசு மொழிந்தார். இத்தகைய இன்ப ஊற்றாகிய அன்பு உலகின் மகா சக்தி. எனவே தான் அணுக்குண்டுக்கு இல்லாத சக்தி அன்பிற்குண்டு என்று சொல்லுவார்கள்.

ஆனால் இன்றைய உலகில் வற்றிப்போய், வறண்டுபோய் காணப்படுகின்ற மிகப் பிரதான மனித விழுமி யப் பண்பாக அன்பு மாறி வருகின்றது. மறுக்கப்பட்ட, மறக்கப்பட்ட அன்பும் மரணத்தைவிடக் கொடுமையானது என்பதை எவரும் உணர்வதில்லை. இதயத்தில் ஈரமும், மூளையில் விரைவும், இரத்தத்தில் சூடும், ஆன்மாவில் அமைதியும் இருந்தால் மனித வாழ்வு சிகரத்தின் உச்சியைத் தொட்டுவிடுவதுடன், வானம் கூட நம் வசப்படும்.

கலிங்கநாட்டின் மீது போர் தொடுத்த அசோக மன்னன் போர்க்களத்தில் நடந்த கோரக்காட்சிகளைக் கண்டு கண்ணீர் விட்டு அழுதான். இனி நாடுகளை "அன்பினால் வெல்வேன் அன்பினால் மக்களை ஆள்வேன்" என உறுதி கொண்டான்.

உன் எதிரிக்கும் உதவிசெய், உனக்கு தீங்கு நினைப்பவருக்கு நன்மை செய் என்று இயேசு கூறுகிறார். அன்பைப் போதிக்கவே ஞானிகளும், இறைவாக்கினர்களும், மகாத்மாக்களும் இவ்வுலகில் தோன்றினர். அன்பு நிலையானது. உலகை ஆளவல்லது. அன்பினால் செய்யும் எந்த ஒரு சிறு செயலும் உயிரை விட மேலானது. எத்தனை பெரிய காரியங்கள், சாதனைகள் சாதித்தோம் என்பதன்று; எதையும் எப்படிப்பட்ட அன்புடன் செய்தோம் என்பதுதான் முக்கியம். வற்றாத நீரூற்றாய் உள்ளங்களில் அன்பு பொங்கட்டும்...

# அன்னை மரியாள்! இன்றைய இளைஞர்களுக்கு ஓர் முன்மாதிரி

அருட்பணி. தே. செல்வரட்ணம்

இன்றைய இளைஞர்களுக்கு, குறிப்பாக கத்தோலிக்க இளைஞர்களுக்கு அன்னை மரியாள் ஓர் முன்மாதிரியாக விளங்குகின்றாள். போதைப்பொருள் கலாசாரத்திற்கும், வன்முறை கலாசாரத்திற்கும் அடிமைப்பட்டு பல்வேறு நடத்தை பிறழ்வுகளுக்குள் சிக்குண்டு, எதிர் கிறிஸ்தவ வாழ்வின் விழுமியங்களை தமதாக்கி வாழ்ந்து கொண்டிருக்கும் . இன்றைய இளைஞர்களுக்கு, நாசரேத்தில் வாழ்ந்த இயேசுவின் தாய் அன்னை மரியாள், சவால் விடக்கூடிய, நல்வாழ்வுக்கு ஊக்கமூட்டக்கூடிய உண்மையுள்ள மாதிரியாக (உருவமாக) உள்ளாள்.

சமூகத்திலிருந்து தம்மை அந்நியப்படுத்தி, தம்மை மையப்படுத்தி தற்காலத்தில் குறுகிய இன்பங்களில் கவனம் செலுத்தி, தமது எதிர்காலம் பற்றிய அதிகளவு அக்கறையற்று, வாழ்வை தொலைத்து வாழ்ந்து கொண்டிருக்கும் இன்றைய இளைஞர்களுக்கு அன்னை மரியாள் கொடுக்கக்கூடிய தாய்க்குரிய சரியான வழிகாட்டல் என்ன? தன் வாழ்வின் ஊடாக கொடுக்கக்கூடிய செய்தி என்ன?

இரண்டாம் வத்திக்கான் சங்கத்திற்கு முன் அன்னை மரியாள் முக்கியமாக "அருள்மிகப் பெற்றவர்", "இறைவனின் தாய்", "விண்ணக மண்ணக அரசி" என கிறிஸ்தவர்களுடைய வணக்கத்திற்கு தூர நிற்கும் அன்னையாக கொடுக்கப்பட்டாள். ஆனால் பின்பு, இரண்டாம் வத்திக்கான் சங்க "திருச்சபை" என்னும் கொள்கை திரட்டு இயல் 8, திருத்தந்தை ஆறாம் சின்னப்பரின் "மரி யாளின் வணக்கம்" (Marialis Cultus) என்னும் ஊக்கவுரை, மேலும் திருத்தந்தை இரண்டாம் அருள் சின்னப்பரின் "மீட்பரின் அன்னை" (Redemptoris Mater) என்னும் சுற்றுமடல் போன்றவை, மரியாளின் மனித சாயலை (human image) முன்நிறுத்தி, "பெண்களுக்குள் பெண்" "Woman among other Women" என்னும் அடிப்படையில் நாம் பின்பற்றக்கூடிய சாயலாக மரியாவை எமக்குத் தந்து நிற்கின்றன.

### இன்றைய உலகின் மாயையில் இருந்து விடுபட

(Disenchantment with Today's World)

இன்றைய இளைஞர்கள் தம்முடைய மூதாதையர்களிடம் இருந்து பெற்றுக் கொண்டுள்ள உலகம், சமூக பொருளாதார சுரண்டல்களாலும், பயங்கரவாதத்தாலும், வன்முறையாலும், மற்றும் சுற்றுப்புறச் சூழல் பாதிக்கப்பட்ட நிலையிலும் இருப்பதையிட்டு வெறுப்பும், கோபமும் கொண்டுள்ளார்கள். அவர்களை பொறுத்தமட்டில் கடவுள் ஒன்றும் செய்யாமல், தீமைகள் இவ்வுலகின் மீது ஆதிக்கம் செலுத்த அனுமதித்துக் கொண்டிருக்கின்றார் என்ற சிந்தனையில் அவர் மீதும் கோபமுடையவர்களாக, இறை நம்பிக்கை இழந்து, பாதிக்கப்பட்டுள்ள இவ்வுலகில் எவ்வாறு மாற்றத்தை ஏற்படுத்த முடியும் என்ற குழப்பத்தோடும் வாழ்கின்றனர். அன்னை மரியாளும் தன்னுடைய வாழ்வில் இதே விதமான அதிருப்தியினை அனுபவித்தாள். ஆனால் இவ்வேளைகளிலெல்லாம், இன்றைய இளைஞர்களை போல் அல்லாமல் அன்னை மரியாள் இறைவன் தன்னுடைய வாக்குறுதிகளை நிறைவேற்றுவார் என்ற ஆழமான நம்பிக்கையை கொண்டிருந்தாள். அன்னை மரியாள் தன்னுடைய பாடலில் (Magnificat) லூக் 1:46-55 புதிய, நீதியான உலகின் தீர்க்கதரிசன எதிர்பார்ப்பினை (Prophetic Expectations) எடுத்தியம்பியுள்ளாள். கடவுள் தான் செய்ய வேண்டியதை செய்வார் என்ற ஆழமான நம்பிக்கையில், தன்னை முழுவதுமாக இறைவனது திட்டத்திற்கு கையளிக்கின்றாள். தான் செய்தது போன்று இறைவனின் வழியில் நடக்க இன்றைய இளைஞர்களையும் அன்னை மரியாள் அழைக்கின்றாள். இன்றைய கஷ்டங்கள் மத்தியில், இறைவனின் பாதுகாக்கும் கரங்களில் நம்பிக்கை கொண்டு, இறையாட்சியை இவ்வுலகில் கட்டியெழுப்பும் அவர்களுடைய ஈடுசெய்யமுடியாத பங்களிப்பை அவள் உணர்த்தி நிற்கின்றாள். எனவே, அன்னை மரியாளைப் போன்று இன்றைய இளைஞர்களும் கடவுளில் ஆழமான நம்பிக்கை கொள்ள வேண்டும். இறுதியில் அனைத்து தீமைகளையும் கடவுள் வெற்றி கொண்டு நன்மையை நிலைநாட்டுவார் என நம்ப வேண்டும்.

### நிச்சயமற்ற எதிர்காலத்திற்கு முகம் கொடுத்தல்

(Facing an Uncertain Future)

இன்றைய இளைஞர்கள் தாம் வாழ்ந்து கொண்டிருக்கும் நம்பிக்கையற்ற இந்த உலகில், தமது நிச்சயமற்ற எதிர்காலம் குறித்த வருத்தத்தினால் தமது செயலிலும், சொல்லிலும் அமைதியற்ற தன்மைகளை வெளிப்படுத்துகின்றார்கள். பல்வேறுபட்ட சமூகவியல் ஆய்வுகள் இவ்வுண்மையை உறுதிப்படுத்துகின்றன. நிச்சயமற்ற எதிர்காலத்தின் அமைதியற்ற நிலைகளை தம் வாழ்வில் துணிவோடு சந்தித்த அன்னை மரியாளில் இன்றைய இளைஞர்கள் அர்த்தம் காண வேண்டும். யோசேப்புக்கு மண ஒப்பந்தமாகி, கூடிவாழுமுன் கடவுளின் திருக்குமாரனின் தாயாக இருக்கவேண்டுமென்ற அழைப்பு கிடைக்கப்பட்டபோது, "ஆம்" என்று பதில் கொடுத்த நேரத்திலிருந்து, எதிர்பாராத நிச்சயமற்ற ஓர் எதிர்காலம் அன்னை மரியாளுக்கு முன்பாக இருந்தது.

பின்பு பாலகன் இயேசுவை கோவிலில் காணிக்கையாக ஒப்புக் கொடுக்கையில் "உம் உள்ளத்தையும் ஓர் வாள் ஊடுருவிப் பாயும்" என்று சிமியோன் இறைவாக்கு உரைத்த போது, அன்னை மரியாள் தன்னை முழுவதுமாக கடவுளுக்கு கொடுக்கின்றாள்.

ஆனால், இச் சூழ்நிலைகளையெல்லாம் துணிவோடு எதிர்கொண்ட அன்னை மரியாள், எம் எல்லோருக்கும் ஓர் எடுத்துக்காட்டாக விளங்குகின்றாள். குறிப்பாக, பல்வேறு குழப்பங்கள் மத்தியில் வாழ்ந்துகொண்டிருக்கும் இன்றைய இளைஞர்களுக்கு அன்னை மரியாள் எடுத்துக்காட்டாக விளங்குகின்றாள்.

எனவே, இன்றைய இளைஞர்கள் தாம் நடக்கும் பாதையில், "நாம் எடுத்து வைக்கும் ஒவ்வொரு அடியிலும் வழிகாட்டியாக எம்மோடு இரும்" என்ற வார்த்தைகளை உச்சரித்து, அவளிடமிருந்து திடத்தையும், உள்தூண்டுதலையும் பெறவேண்டும். மெக்சிக்கோவில் உள்ள Tepeyac என்ற குன்றில் யுவான் தியோகுக்கு (Juan Diego) காட்சி கொடுத்தபோது கூறிய அழகான வார்த்தைகள், இன்றைய இளைஞர்களுக்கும் கூறுகின்ற வார்த்தைகளாக இருக்கின்றன: "பயப்படாதீர், அஞ்சாதீர், நான் உன் தாயல்லவோ?"

### சுய மேன்மையாக்கலுக்கான விருப்பம்

(Desire for Self-Actualization)

ஆபிரகாம் மஸ்லோவ்வின், மனித தேவைகளின் பட்டியலிடலில் சுயமேன்மையாக்கல் முதலிடத்தில் உள்ளது. ஒவ்வொரு மனிதரைப் பொறுத்தளவிலும், இது உண்மையாக இருக்கின்ற போதிலும், தற்கால போலியான வாக்குறுதிகளைக் கொடுக்கும் நுகர்வுச் சந்தையினாலும், வாழ்வின் முறைகளாலும் இச்சுய மேன்மையாக்கலானது குறிப்பாக இன்றைய நவீன இளையோர் அனைவரையும் பொறுத்தமட்டில் அவர்களது கனவாக அமைந்துள்ளமையை காணக்கூடியதாகவுள்ளது.

தமது சுயநிறைவை உணர்வதற்கும், முழுமையான இளைஞன், யுவதியாக வருவதற்கும் இன்றைய இளைஞர், யுவ்திகள் எதை கொள்வனவு செய்ய வேண்டும், எதை உடுக்க வேண்டும், எங்கே செல்ல வேண்டும், எதை செய்ய வேண்டும் என அவர்கள் மூளைச்சலவை செய்யப்படுகின்றார்கள். எத்தனை இளைஞர்கள் இவ்வாறான போலியான சிந்தனைகளுக்கு இலகுவாக பலியாகி விடுகின்றார்கள்!

அன்னை மரியாள் தான் வாழ்ந்த காலத்தில் காணப்பட்ட போலிகளையும், முன்வைக்கப்பட்ட கவர்ச்சியானவற்றையும் கண்டு ஈர்க்கப்படாமல், தன்னுடைய வாழ்வினை முழுமையாக வாழ்ந்து, தன் வாழ்வின் இலக்கை அடைந்தாள். அவள் கடவுளிடத்திலேயே மகிழ்ச்சி கண்டாள்: "ஆண்டவரை எனது உள்ளம் போற்றிப் பெருமைப் படுத்துகின்றது" (லூக் 1:47) அத்தோடு இந்த உலகின் அழியக்கூடிய பொருட்களில் அல்ல மாறாக, இறைவனில் நிறைவைக் கண்டாள்: "வல்லவராம் கடவுள் எனக்கு அரும்பெரும் செயல்கள் செய்துள்ளார்" (லூக் 1:49). இவ்வாறு இன்றைய இளைஞர்களும், தற்கால இவ்வுலகில், போலியான கவர்ச்சிகளுக்கும் நிலையற்ற இவ்வுலகின் இன்பங்களுக்கும் உறுதியான, முடிவான மறுப்பு தெரிவிப்பதன் ஊடாக, கடவுளின் துணையோடு, தம் வாழ்வின் முழுமையை அடைய முடியும் என்பதே அன்னை மரியாள் அவர்களுக்கு கொடுக்கும் செய்தியாகும்.

### வாழ்வின் அர்த்தத்துக்கான தேடல்

(Searching for the Meaning of Life)

கருக்கொலை (Abortion), சிசுக்கொலை (Infanticide) வேதனையற்ற மரணம் ( Euthanasia), உடல், உளரீதியான வன்முறையினால் பாதிப்பு, (Abused through Physical and Psychological Violence), விபச்சாரம் (Prostitution), சிறுவர் பாலியல் துஷ்பிரயோகம் (Paedophilia) போன்றவற்றின் தாக்கங்களினால் வாழ்வின் விழுமியங்களையும் மேன்மையையும் குறித்து தடுமாறி நிற்கும் இளைஞர்களுக்கு, பல்வேறு பிரச்சனைகள் மத்தியிலும் பெத்லகேமில் பாலகன் இயேசுவைப் பெற்றெடுத்து பாதுகாத்து வளர்த்ததன் ஊடாக அன்னை மரியாள் முன்மாதிரியாக விளங்குகின்றாள். கணவனோடு கூடிவாழ்வதற்கு முன் குழந்தையை கருத்தரிப்பதென்பது அன்றைய யூத சமூகத்தில் இலகுவானதொரு செயல் அல்ல. ஏரோதுவின் கொலைதிட்டத்திற்கு பாலகன் இயேசுவை இரையாக்குவதை விட அவரை பாதுகாப்பதற்காக இயேசுவைப் பெற்றெடுத்த பின், எகிப்தில் அகதியாக வாழ்ந்திடவும் அன்னைமரியாள் விருப்பம் கொண்டாள்.

எனவே, அன்னை மரியாள் இன்றைய இளைஞர்களுக்கு வாழ்வின் புனிதத்தத்துவத்தை குறித்தும், வாழ்வின் மதிப்பை குறித்தும் உறுதியான செய்தியை கொடுக்கின்றாள். வாழ்வின் அர்த்தம் என்ன? என கேள்வி எழுப்பும் இன்றைய இளைஞர்களுக்கு இன்றைய நுகர்வு உலகம் கடவுள் அற்ற, உலகப் பொருட்கள் சார்ந்த கொள்கைகளை கொடுத்து, ஏக்கம் நிறைந்த நம்பிக்கையற்ற இருளிற்குள் மூழ்கடிக்கிறது. இதிலிருந்து வெளியேறுவதற்கு, விடுபடுவதற்கு பெரும்பாலும் போதைப்பொருளுக்கும், மதுவுக்கும், மேலும் திருமணத்திற்கு முன் பாதகமான பாலுறவு, ஆபாசப்படம், கொலை, சண்டை, தற்கொலை போன்றவற்றிற்கும் அடிமையாகின்றனர்.

அன்னை மரியாள் வாழ்விற்குரிய அர்த்தத்தை உலகின் நுகர்வுக் கலாசாரத்தில் தேடவில்லை. ஒரு ஏழையாக பிறந்து, கடவுளின் ஏழையாகவே



(God's anawim) வாழ்ந்தாள். தனக்காகவோ, தன் தேவைக்காகவோ எந்த சலுகைகளையும் தன் மகனிடத்தில் கேட்கவில்லை. இன்றைய இளைஞர்கள் இறைவனுக்கும், அயலவர்களுக்கும் பணிபுரிந்து தங்களையே கொடுப்பதன் ஊடாக வாழ்வின் அர்த்தத்தை காணமுடியும் என்பதை அன்னை மரியாள் அவர்களுக்கு கற்பிக்கின்றாள். தம் வாழ்வின் அர்த்தத்தை தேடும் இன்றைய இளைஞர்களுக்கு இயேசுவுக்கு அடுத்த படியாக உதவி செய்யக்கூடியவளாக அன்னைமரியாள் விளங்குகின்றாள்.

நசரேத்தூர் மரியாளை தம் மனதில் இருத்தி வாழ்வதன் ஊடாக தாம் எதிர் கொள்ளும் இன்றைய சவால்களுக்கு இளைஞர்கள் விடைகாண முடியும்.

### விசுவாசப் பயணத்தை மேற்கொள்ளுதல்

(Making the Journey of Faith)

இன்றைய இளைஞர்களைக் குறித்து இன்று அநேகமானோர் கொண்டிருக்கும் எண்ணம்: அவர்கள் சமயப்பற்றற்றவர்கள், இறைபற்றற்றவர்கள் என்பதாகும். இது முற்றுமுழுவதுமாக உண்மை இல்லாவிடினும் அதில் சிறிதளவு உண்மையிருக்கிறது. அதாவது, இன்றைய இளைஞர்களில் சிலர் ஒழுங்கற்ற பாலியல் நடத்தைகளில் ஈடுபடுவதும், சமூக ஈடுபாடற்ற தன்மையோடு விளங்குவதும், தம்மை முதன்மைபடுத்தி வாழ்வில் ஒழுக்கம் இல்லாமல் திரிவதும், ஆன்மீகத்தில் நாட்டம் இல்லாமல் இருப்பதும் தவறில்லை என நினைக்கின்றார்கள்.

இவ்வாறு ஒரு சில இளைஞர்கள் இருந்தாலும், பெரும்பாலான கத்தோலிக்க இளைஞர்கள் இன்னும் சமயப்பற்றுதியோடும், தம்முடைய குழப்பங்களில், சந்தேகங்களில் இறைவனை தேடு பவர்களாகவே உள்ளனர். கடவுளை தேடும் இளையோரின் முயற்சியில் அன்னை மரியாள் அவர்களுக்கு உதவக்கூடியவளாகவே இருக்கிறாள். ஏனென்றால், அவள் இறைவனுக்கு மிக நெருக்கமாகவும், இவர்களுடைய அன்னையாகவும் விளங்குகின்றாள். தன்னுடைய சிறிய வட்டத்திற்குள் தன்னுடைய சிந்தனைகளையும், விருப்பு வெறுப்புக்களையும் முடக்கிவிடாமல், கடவுளின் திட்டம் தன்னை வழிநடத்த விட்டுக் கொடுத்தாள். படைத்தவரிடமே தன்னை முழுவதுமாக கையளித்தாள். கடவுள் மட்டுமே அவளுடைய விசுவாசத்தின் உள்ளடக்கமாக இருந்தார். தன்னுடைய விசுவாசத்தையும், வாழ்வையும் ஒன்றிணைத்து கடவுளுடைய மேலான திட்டத்திற்கு தன்னை முழுவதுமாக கொடுத்தாள். இன்றைய இளைஞர்களையும் இத்தகைய தற்கையளிப்பிற்கு அன்னை அழைக்கின்றார்.

(தொடர்ச்சி 09ம் பக்கம்)

# 125வது ஆண்டு யூபிலி விழாவில் திருகோணமலை மறைமாவட்டம்

25.08.2018 இல் திருகோணமலை மறைமாவட்டமானது தனது உருவாக்கத்தின் 125வது ஆண்டு நிறைவு யூபிலி விழாவினைக் கொண்டாடுகின்றது. இலங்கையில் கத்தோலிக்க கிறிஸ்தவர்களின் வருகையானது காலனித்துவ ஆட்சியுடன் ஆரம்பிக்கின்றது. அந்த வகையில் இலங்கைக்கு 16 ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் அதாவது 1505 இல் முதலில் வருகை தந்த ஐரோப்பியர்களாகிய போர்த்துக்கேயரின் வருகையுடன் ஆரம்பமாகியது. ஆயினும் நவீன புதைபொருள் ஆய்வுகளின் பயனாக 6 ஆம் நூற்றாண்டில் அனுராதபுர ஆட்சிக்காலத்திற்குரியதாக கண்டு பிடிக்கப்பட்ட நொஸ்தோரிய சிலுவையானது இலங்கையில் ஐரோப்பியர்களின் வருகைக்கு முன்னதாக பாரசீக வர்த்தகர்களின் வருகையினால் கிறிஸ்தவம் அறிமுகப்படுத்தப்பட்டிருக்கலாம் என நம்பப்படுகிறது. எனினும் போர்த்துக்கேயரின் வருகையினால் நிறுவப்பட்ட கத்தோலிக்க நம்பிக்கை வாழ்வானது அவர்களது ஆட்சிக்காலத்தில் இலங்கையின் கரையோரப் பிரதேசங்களில் நன்கு வளர்ச்சி கண்டிருந்தது. ஆயினும் அவர்களைத் தொடர்ந்து வந்த ஒல்லாந்தரின் வருகையினால் கல்விினிஷ்ட் நெறி முன்னிலைப்படுத்தப்பட்டு கத்தோலிக்க நெறி ஒடுக்கப்பட்டது. இவ்வேளையில் தொடர் முப்பது ஆண்டுகளுக்கு கத்தோலிக்க நம்பிக்கை நெறியினை வளர்த்தெடுக்க தத்தளித்த வேளையில், இறைவனின் கருவியாக இன்றைய இலங்கையின் திருத்தூதரும், புனிதருமாகிய ஜோசப் வாஸ் அடிகளாரும், அவரோடிணைந்து பணியில் இணைந்து கொண்ட ஓரத்தோறியன் சபைக்குருக்களும் இக்கட்டான காலகட்டத்தில் நம்பிக்கை வாழ்வினை தூக்கி நிறுத்தினார்கள். ஜோசப்வாஸ் அவரது குருக்களும் இலங்கையின் கிழக்குக்கரையின் பகுதிகளாகிய திருகோணமலை, கொட்டியார் (மூதூர்), மட்டக்களப்பு போன்ற பகுதிகளைச் தரிசித்து விசுவாசிகளை ஊக்கப்படுத்தியதாக வரலாற்றுக் குறிப்புக்கள் உண்டு. அவ்வாறான குறிப்புக்களுள் ஒன்றுதான் மூதூரில் காணப்படுகின்ற அருட்தந்தை மிகேல் டி மெல்லோ அடிகளாரின் கல்லறையாகும்.

ஆங்கிலேயரின் ஆட்சிக்காலத்தில் கத்தோலிக்க நெறியினை தங்கு தடையின்றி பின்பற்றுவதற்கான சுதந்திரம் பிரித்தானிய அன்றைய ஆளுநரால் வழங்கப்பட்டது. அதனால் இலங்கையில் கொழும்பு மறைமாவட்டம் உருவாகியது. அதனைத்தொடர்ந்து யாழ்ப்பாண மறைமாவட்டம் உருவாகியது. இலங்கையின் கிழக்கு மாகாணமும் யாழ்ப்பாண மறைமாவட்ட ஆளுகையின்கீழ் இருந்தது.

இக்காலகட்டத்தில் 19 ஆம் நூற்றாண்டின் இறுதிக்காலத்தில் மறைபரப்புத் தேவைகருதி திருத்தூது பிரதிநிதி பேரருட்திரு எல். எம். சலஷ்கி (Mgr. L. M. Zaleski) ஆண்டகை அவர்களின் வேண்டுகோளின் பிரகாரம் 25.08.1893 ஆம் ஆண்டு அன்றைய திருத்தந்தை 13ஆம் லீயோவால் திருகோணமலை மறைமாவட்டமானது இலங்கையின் ஐந்தாவது மறைமாவட்டமாக அறிவிக்கப்பட்டது. அன்று

**அருட்பணி அ. அ. நவரெத்தினம்**

புதிதாக அறிவிக்கப்பட்ட மறைமாவட்டத்தின் பகுதிகளாக இன்றைய கிழக்கு மாகாணம் முழுவதும் அத்துடன் வடமத்திய மாகாணத்தின் பொநறுவை (தமன்கடவை) மாவட்டமும் உள்ளடக்கப்பட்டிருந்தன. (இப்பகுதிகள் இதற்கு முன்னதாக யாழ்ப்பாண மறைமாவட்டத்தின் பகுதிகளாக காணப்பட்டன). மறைமாவட்டத்தின் பெரும்பாலான கத்தோலிக்கரின் பிரசன்னமும், ஆயரின் வதிவிடமும் மட்டக்களப்பில் காணப்பட்டமையினால் தேவை நோக்கம்கருதி இம்மறைமாவட்டமானது திருகோணமலை - மட்டக்களப்பு மறைமாவட்டமென 23.10.1967ஆம் ஆண்டில் பெயர் மாற்றம் செய்யப்பட்டது. 19.12.1975 இல் யாழ்ப்பாண மறைமாவட்டத்தின் அனுராதபுர மாவட்டமும், திருகோணமலை - மட்டக்களப்பு மறைமாவட்டத்தின் பொலன்நறுவை மாவட்டமும் இணைக்கப்பட்டு புதிய திருத்தூது பரிபாலக பிரிவு உருவாக்கப்பட்டு, அதுவே 18.03.1982இல் புதிய அனுராதபுர மறைமாவட்டமாக உருவாக்கப்பட்டது. அதன்பிற்பாடு திருமலை - மட்டுநகர் மறைமாவட்டத்தின் நிர்வாகப்பகுதியாக திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களை உள்ளடக்கிய கிழக்கு மாகாணம் செயற்பட்டு வந்தது. இதன் மொத்த நிலப்பரப்பு 9,996 சதுர கிலோ மீற்றராகும். இறுதியாக யுத்த காலத்தில் மிகுந்த தேவையாக கருதப்பட்ட திருமலை - மட்டுநகர் பிரிப்பானது 03.07.2012இல் சாத்தியமாகி திருமலை - மட்டுநகர் மறைமாவட்டத்திலிருந்து மட்டக்களப்பு புதிதாக பிரித்தெடுக்கப்பட்டு இலங்கையின் 12வது மறைமாவட்டமாக உதயமாகியது. இன்றைய திருகோணமலை மறைமாவட்டமானது திருகோணமலை நிர்வாக மாவட்டத்தை மாத்திரம் உள்ளடக்கிய 2896 சதுரகிலோ மீற்றர் பரப்பில் இயங்கி வருகின்றது. இதன் எல்லைகளாக வடக்கே புல்மோட்டையும் தெற்கே வெருகலும் மேற்கே அக்கோபுர பிரதேசமும் கிழக்கே இந்து சமுத்திரமும் காணப்படுகின்றது.

புதிதாக உருவாக்கப்பட்ட திருமலை மற்றும் காலி (அதே காலத்தில் உருவாக்கப்பட்டது) மறைமாவட்டங்களை நிர்வகிக்கின்ற பொறுப்பானது இயேசு சபைத் துறவிகளின் கரங்களில் ஒப்படைக்கப்பட்டது. முதலில் பிரான்ஸ் நாட்டுத் சம்பகேன் மாநில துறவிகளாலும் பின்னர் அமெரிக்க நியு ஓர்லியன்ஸ் மாநில துறவிகளால் நிர்வகிக்கப்பட்டு இன்று சுதேச மறைமாவட்டக் குருக்களால் நிர்வகிக்கப்படுகின்றது. இணைந்த திருமலை மறைமாவட்டத்தின் ஆயர்களாக ஐந்து பேரும், துணை ஆயர்களாக இருவரும் செயற்பட்டுள்ளார்கள். அவாகள் முறையே

- அதிவண. சாள்ஸ் லவிஞ்சே (SJ) (27.08.1898 – 11.07.1913 – இறப்பு – பிரான்ஸ்)
- அதிவண. கஷ்ரன் றொபிஷோ (SJ) (22.03.1917 – 12.02.1946 – இறப்பு – மட்டக்களப்பு)
- அதிவண. இக்னேஷியஸ் கிளேனி (SJ) (10.11.1947 – 15.02.1974 – பதவி விலகல், இறப்பு – அமெரிக்கா)
- அதிவண. லீயோ இராஜேந்திரம் அன்ரனி (15.02.1974 – 17.03.1983 – பதவி விலகல், இறப்பு – திருகோணமலை)
- அதிவண. யோசப் கிங்ஸ்லி சுவாம்பிள்ளை (17.03.1983 – 03.06.2015 – ஓய்வு)
- அதிவண வஸ்தியான்பிள்ளை தியோகுப்பிள்ளை - துணை ஆயர் (பின்னர் யாழ் ஆயர்)
- அதிவண யோசப் பொன்னையா - துணை ஆயர் (இன்றைய மட்டுநகர் ஆயர்)

திருமலை மறைமாவட்டமானது தனித்து இயங்கத் தொடங்கியபோது அதன் ஆயராக தொடர்ந்தும் அதிவண யோசப் கிங்ஸ்லி சுவாம்பிள்ளை அவர்கள் செயற்பட்டார். அவரின் ஓய்வினையடுத்து தனித்த திருமலை மறைமாவட்டத்தின் முதல் ஆயராக அதிவண கிறிஸ்ரியன் நோயல் இம்மானுவேல் அவர்கள் 03.03.2015இல் நியமிக்கப்பட்டு ஆயராகத் திகழ்கின்றார். புதிய ஆயரின் வழிகாட்டுதலின்கீழ் மறைமாவட்டத்தின் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இவரது காலத்திலேயே மறைமாவட்டமும் அதன் உருவாக்கத்தின் 125வது யூபிலி ஆண்டுச் சிறப்பினையும் கொண்டாடுகின்றது.

இன்றைய திருமலை மறைமாவட்டத்தில் மொத்தமாக இருபத்திமூன்று (23) மறைமாவட்ட சுதேச குருக்களும், அத்துடன் துறவறசபைக் குருக்களும், இருபால் துறவியரும் பணியாற்றுகின்றார்கள். திருமலை மறைமாவட்டத்தில் பதினாறு பங்குகளும் ஏனைய பணிகளும் முன்னெடுக்கப்படுகின்றன. திருமலை மறைமாவட்டத்தில் கத்தோலிக்கர் மொத்த சனத்தொகையில் 6.6% உள்ளனர். கத்தோலிக்க விசுவாசிகளில் பெரும்பான்மையாக தமிழர்களும், குறிப்பிடத்தக்களவு சிங்களவர்களும், பறங்கியர்களும் காணப்படுகின்றார்கள். தமிழ், சிங்கள, முஸ்லீமென மூவின மக்களையும் ஓரளவிற்கு சமமாக கொண்டுள்ள திருமலை மறைமாவட்டத்தின் ஆன்மீகப்பணி, சமயப்பணி, சமூகப்பணி சவால்கள் நிறைந்ததே. போரின் வடுக்களையும், இழப்புக்களையும், இடப்பெயர்வுகளையும் அதிகம் சந்தித்த திருமலை மறைமாவட்டமானது தனது 125வது யூபிலி பயணத்தினூடாக புதிய வீறுநடைபோட வாழ்த்துகின்றோம்.

**இயேசுவின் இறப்பு வரை சிலுவை என்பது துன்புறுத்தல், அவமானம் மற்றும் மரணத்தின் சின்னமாக விளங்கியது. இயேசுவின் இறப்பின் பின் சிலுவை நிலைவாழ்வின் சின்னமாகியது. அருள்தரும் பேரின்பத்தின் சின்னமாகியது. ஒளி யின் சின்னமாகியது. நல்லிணக்கத்தின் சின்னமாகியது. இவ்வுலகில் காணப்படும் பலவிதமான பல் கலாசாரங்களுக்கு உட்பட்ட சிலுவைகளைப் பற்றிய மறை அறிவையும், ஆன்மீக அறிவையும், அனுபவத்தையும் மையமாகக் கொண்டு பல்வேறு வகையான சிலுவைகளின் வடிவங்களையும் அவற்றிற்கான விளக்கங்களையும் காட்சிப்படுத்தியது மட்டுமன்றி, சிலுவைகளின் சரித்திரம் என்னும் நூலிலும் பதிவு செய்துள்ளேன்.**

**அருட்பணி சிசில் ஜோய் பெரேரா, அதிபர், "தஹம் செவன" இடைநிலைக் குருமடம், களுத்துறை.**

"எனது சீடராக வரவிரும்பும் எவரும் தன் சிலுவையைத் தூக்கிக்கொண்டு என்னைப் பின்பற்றட்டும்" – இயேசுக்கிறிஸ்து

கிறிஸ்தவத்திலே உள்ள பல திரித்துவ அடையாளங்களை இணைத்து இந்த சிலுவை உருவாக்கப்பட்டுள்ளது. இது உயரிய நம்பிக்கையை உருவாக்குகின்றது. புனித திரித்துவத்தின் மறைபொருளானது கத்தோலிக்கருக்கும் ஏனைய பிரிந்து போன சபைகளுக்குமே உரித்தான தனித்துவத்தை கொண்டுள்ளது.

உண்மையாக இந்த மறை பொருளில் நம்பிக்கை வைக்கும் எங்களுக்கும் நாம் நம்பிக்கை வைக்கும் எல்லாவற்றிற்கும் ஆரம்ப புள்ளியாகவும் மையப்புள்ளியாகவும் காணப்படுகின்றது.

தூய திரித்துவத்தின் குறைவற்ற அன்பானது மனித வாழ்விலே பொழியப்படுகின்றது. கடவுளுடைய சலிப்பற்ற அன்பே இறுதியில் தனது ஒரே மகனை மனிதர்கள் நடுவில் அனுப்பியதற்கு காரணமாய் இருந்தது. இந்த அன்பின் மறைபொருளின் உச்சக்கட்டமே பாஸ்கா மறைபொருளாகும் இது சிலுவையால் ஞாபகப்படுத்தப்படுகின்றது. எனவே மைய மறைபொருளையும் இணைக்கும் மறைபொருளையும் ஒன்றாக இணைத்து வைத்திருக்கின்றது.



**திருத்துவ சிலுவை (மூவொரு இணைப்பான)**

நாம் இங்கு பார்க்க வேண்டியதெல்லாம் கிறிஸ்து கடினமான வழியைத் தேர்ந்தெடுத்தார். எங்களுடைய நம்பிக்கை இவ்வுலகத்தின் தேவைகளுக்கும் தகுதிகளுக்கும் கட்டுப்படுத்தாது.

எம்மிடம் அதற்கு மேலாக காலத்தையும் இடத்தையும் தாண்டிய ஏதோ ஒன்று உண்டு. யாரெல்லாம் உண்மையான கிறிஸ்தவத்தை வெறுமனே மனித நிறுவனங்களாக உருவாக்க விளைகிறார்களோ, அவர்களுக்கெல்லாம் சிலுவை ஞாபகப்படுத்துவது என்னவென்றால் யாதார்த்தத்தில் எல்லாமே இறைவனுடைய ஒரு மறைபொருளாகும்.



சிலுவையில் Patonce வடிவமானது மூன்று புள்ளிகளை நோக்கி செல்வதாகவும் குழிவு வடிவமானதாகவும் காணப்படும்.

Fleury Cross - இதன் அடிப்படை வடிவமானது pattee சிலுவையின் அடிப்படையிலிருந்து வருவதாக குறிப்பிடப்படுகின்றது. புனித யோவானுடைய சிலுவையாகவும் கருதப்படுகின்றது. எல்லா pattee சிலு வைக்கும் மேலாக சிறு வளைவுகள் காணப்படும். புறப்பகுதியில் காணப்படும் விளிம்புகள் முக்கியத்துவம் கொண்டதாக காணப்பட்டதால். இது pattee சிலுவையாக தோன்றியது.

## பற்றன்ஸ் சிலுவை

பற்றி என்னும் சிலுவையானது "pay" என்னும் (பூனை, நாய் போன்ற வற்றின் பாதம்) சொல்லின் French மொழிபெயர்ப்பாகும். patonce வடிவத்தின் முடிவில் மூன்று முக்கிய புள்ளி மூவொரு கடவுளின் தனிச்சிறப்பை புலப்படுத்தி நிற்கிறது. அத்தோடு இன்னும் சிலர் ஈட்டி வடிவமாக இருப்பதால் தீமைக்கெதிரான தாக்குதலின் தனிச்சிறப்பாகவும் காணப்படுகின்றது. இச்சிலுவை கிரேக்கம், இலத்தீனில் ஆரம்பிக்கப்பட்டதாக குறிக்கப்படுகின்றது.

இச் சிலுவைகள் புனித யோவான் அம்புலன்ஸ் குழுவால் பாவிக்கப்படும் சிலுவைகளும் patonce சிலுவையின் தொடக்க நிலையை தழுவியதாகும். எட்டுப் புள்ளிகளை கொண்ட சிலுவைகளாக காலப்போக்கிலே maltese சிலுவையும் தோற்றம் பெற்றது. கொஸ்பிற்றலர் சகோதரர்களால் தங்களுடைய கறுப்பு அங்கியிலே இயேசுவின் சிலுவையை அடையாளமாக இதை அணிந்தனர். ஆரம்பத்தில் இவர்கள் புனித பூமியில் இருந்த போதிலும் பின்பு malta பகுதியிலே 1798 வரை வாழ்ந்தார்கள். இந்த சகோதரர்களை பொறுத்தவரையில் சிலுவையின் ஒவ்வொரு பகுதிகளும் வேறுபட்ட வடிவத்தை கொடுத்தது.

- நிறம் - வெள்ளை - தூய்மையான உள்ளம்.
- சிலுவையில் நான்கு வளைவுகள் - தலையான புண்ணியங்கள்.
  முன்மதி - கவனமாக இருத்தல், நீதி - மக்களால் சரியானதை செய்தல். உளப்பாங்கு - நடுநிலையான தீர்ப்பு. துணிவு - தைரியம்.
- சிலுவையினுடைய 8 புள்ளிகளும் இயேசுவினுடைய மலைப்பொழிவுகளை குறிக்கிறது.

# காவலன் கலசம்

## துன்பத்தை வென்ற புனிதை



இறைவன் தனக்கென தெரிந்த பூமி
பாலும், தேனும் பொழியும் கானான்
விசுவாசத்தின் தந்தை பெற்ற நிலம்
அதுவே வாக்கின் பூமி
மன்னன் தாவீது ஆண்ட நகர்
சாலமோன் சிறப்பு கூறும் பேராலயம்
இறைவாக்கு நிறைவேறிய புனித பூமி
மீட்பர் மனுவுருவான பரிசுத்த மண்
பகிரங்க வாழ்வில் முதல் அழைப்பு
விடுவிக்கப்பட்ட கலிலேயா
மரியம் உதித்த ஊர்
சோதர் பன்னிருவர் இறப்பின் பின்
பெற்றோர் தொழுவத்திற்கு செய்த நடை பயணம்
கன்னி மரியின் பரிந்துரையில் மலர்ந்தது அபிலெனில்
அரேபிய சிறிய மலர் மரியம்
வயது மூன்றில் பெற்றோரை இழந்த அவள்
மாமன் வீட்டில் வளர்க்கப்பட்டாள்
இயற்கை வனப்பில் இறையனுபவமும்
பக்தியுடன் முதிர்ச்சியும் பெற்றாள்
அகவை பதின்மூன்றில் மணம் செய்ய மறுத்த
மரியம் துன்புறுத்தப்பட்டாள் மாமனால்
வீட்டை விட்டு வெளியேறிய வேளை
துட்டனால் கொலை செய்யப்பட்டு எறியப்பட்ட காலை
கன்னிமரி பராமரிப்பில் புதுமையாய் காப்பாற்றப்பட்டாள்
பணிப்பெண்ணாய் வீடுகளில் பணிபுரிந்து
ஈற்றில் இறை திட்டம் நிறைவேற
அவர் குரலொலி செவிமடுத்து
சூசைமுனியின் அருட்சகோதரியானார்
தேர்ந்தெடுத்த பாத்திரமாய் இயேசுவின் திருக்காயங்களை
உடலினில் பெற்று வேதனையில் பங்கெடுத்தார்
குழு வாழ்வின் அவமானம், வேதனை, தனிமை
இயேசுவின் அன்பில் மரியாளின் துணையில் ஒன்றிணைந்து
பரவச நிலையில் இறைவாக்கு எடுத்தியம்பினார்
ஆழ்நிலை கார்மேல் தியான வாழ்வு அழைத்தது அவளை
இந்தியாவில் அவள் வாழ்வு தீயில் புடமிடப்பட்டு
தீய சக்தியின் விளைவால் அனுப்பப்பட்டாள் நாட்டை விட்டு
தன் தாயாம் பெத்லகேமில் கார்மேல் மடமொன்றினை
ஸ்தாபிக்கப் புறப்பட்டாள், மரியம் வீர மங்கையாக
அழகுற அமைக்க, வழி நடந்த உருவானது
கார்மேல் மடம், அவர் கனவு நனவானது
பிதாப்பிதா, குருக்கள், துறவறத்தோர் அனைவரின்
அன்பிற்கிடமாகி தூய வாழ்க்கையினால் மாதிரியானார்
உயிர்த்த இயேசு காட்சி கொடுத்த எம்மாவுஸ்
வெளிப்படுத்தி, ஜெருசலேம் கார்மேல் மடம்
உருவாக வழிவகுத்து, ஆழ்ந்த தியானத்தில்
இறை பிரசன்னம் கண்டனுபவித்து
இதயத்தில் அவர் பெயர் பதித்து.
வேதனையில் இன்பம், சிலுவையில் முழுமை
விண்ணக இன்பம் காண ஏற்பினார் - தன்
மரணம் குறித்து அறிந்து, எடுத்துரைத்து
ஆவலுடன் அதற்குத் தயாரானார்.
உயிர்விடும் தறுவாயிலும் குழு சகோதரிகளின் அன்பை
நன்றியுள்ளத்துடன் ஏற்று, தூய எண்ணத்துடன்
விண்ணக வீட்டினை நோக்கிப் புறப்பட்டார்.
கீழ்ப்படிவில் அனைவருக்கும் அடையாளமாக,
அன்பிற்கு இலக்கணமாக, தரித்திரத்தின் இருப்பிடமாக
இறை பக்தியில் பரவச நிலையினை அடைந்து
அவமானப்படுத்தியோரை மன்னித்து, அரவணைத்து
இல்லாதோருக்கு உள்ளதைப் பகிர்ந்து
கார்மேல் கன்னியர்க்கு முன்மாதிரியாய் வாழ்ந்து
தூய வாழ்வினால் மரியம் புனிதரானார்.

அருட்சகோதரி
எம்.பவளராணி ஞானப்பிரகாசம் AC

## கொஞ்சேஞ்சி மாதாவே வரம் தாருமம்மா...!

கொஞ்சேஞ்சி மாதாவே
யாழ் திரு அவையின் காவலியே
நின் பாதம் பணிந்து நின்றோம்
சேயர் எமக்கருள் தாருமம்மா

தந்தை இறைவனின் பொக்கிஷமே
திருமகனை உதரத்தில் சுமந்தவளே
ஆவியின் கற்புள்ள நாயகியே
வாழ்வு சிறந்திட வரம் தாருமம்மா

ஆண்டவரின் அடிமை என்றவளே
எப்போதும் உதவிக்கரம் தருபவளே
மீட்பின் பாதையிலே நடந்தவளே
எம் துன்பம் நீங்கிட வரம் தாருமம்மா

அமைதியற்று இருக்கின்ற எம்மண்ணில்
அச்சத்தோடு தினம் தினம் வாழுகின்றோம்
நிம்மதியாய் எப்போதும் படுத்துறங்க
நிலை அமைதி தந்து எமைக் காத்திடம்மா

கற்புடன் வாழ்ந்து விண்ணகம் சென்றவளே
நின் பரிந்துரையால் புதுமைகள் பலகண்டோம்
நம்பிக்கையோடு கரம் கூப்புகின்றோம்
நிலைவாழ்வு நாம் காண எமக்கருள் ஈயுமம்மா

இ.அ.அமலரட்ணம்

## சிந்திக்க ஓர் சித்திரம்




## இளையோர் காவியம் 12

ஆண்
பெண் விந்தணுக்களின்
உருவாக்கம் மட்டும் தான்
உடல்

உயிர்
கடவுளைத் தவிர
எவருக்கும் விளங்காத
பொருள்

நீ
உயிர்களுக்கு கொடுக்கும் மதிப்பு
ஆன்மீக வாசலின்
திறப்பு

உன்னை
அடிக்கடி கடவுள் சந்திப்பது
மனிதர்களின் ஊடாகத்
தான்

நீ
அடுத்தவருக்கு வெட்டுகிற குழி
உனக்கும் சேர்த்து வெட்டுகிற
குழி

உன்னால்
வெறுக்கப்படும் உயிர்களின் பெருமூச்சு
நீ அலையப்போகிற
பாதை

நீ ஒருவருக்கு
தீமை செய்ய நினைக்கும் போது
அந்த
மனிதருடைய குழந்தை பருவத்துக்கு போ
தீமை செய்கிற எண்ணம் வராது
உனக்கு

உயிர்களை
நேசிக்காத அன்பு
கிருமிநாசினிகளை விட
படு நஞ்சு

எப்பவும்
உயிர்களை நேசிப்பது
முகமூடி போடாத
அன்பு

மழிந்து போன
உறவுகளுக்கு
ஒன்றும் தெரியாது என்பதெல்லாம்
பொய்

நீ
அழுகிற போது துன்பப்படுகிறபோது
அதே நிலையில் இருக்கும்
ஆவிகள்

நீ
தப்பாக நினைக்கக் கூடாது
முள்ளிவாய்க்காலில் கடவுள்
கண்ணை மூடிக்கொண்டு இருந்தவர்
என்று
இன்னும் நேரம் வரவில்லை
கடவுள் தீர்ப்பு வழங்க

(தொடரும்...)

உயிரோவியன்

பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின்

# கத்தோலிக்க கூத்து நூற்ப் பதிப்புக்கள்

> கூத்துக்கள் கத்தோலிக்க இலக்கியங்களாக மரபுரிமையின் எழுத்தாதரங்களாக, கூத்துக்கலை மரபின் சந்ததிக்கடப்புக்கான மூலாதாரங்களாகக் காணப்படுகின்றன. இத்தகைய கூத்துக்கள் ஏட்டுருவில் இருந்து நூல் வடிவத்தினைப் பெறுதல் என்பது கட்டாய தேவையாகும்.

கடந்த வருடம் வடமாகாண கலாசார அமைச்சு மன்னார் பிரதேசத்தினைச் சேர்ந்த மூன்று கத்தோலிக்க கூத்து நூல்களை பதிப்புச்செய்து வெளியிட்டுள்ளது. இவ்வருடம் இரண்டு நூல்களை பதிப்பித்துள்ளது.

பெறுமதிமிக்கதான இம்முயற்சியை பாராட்டுமுகமாகவும் இத்தகைய பதிப்பு நடவடிக்கைகளின் அவசியம் பற்றிய ஒரு பார்வையை இன்றைய கலைக்காவலன் இக்கட்டுரையின் மூலமாக முன்வைக்கின்றது.

கத்தோலிக்க கலைப்பாரம்பரியத்தின் மிக முக்கிய மரபாகக் காணப்படுவது கூத்துக்கலை. கூத்துக்கள் தமிழர்களின் மரபுவழி அரங்கக் கலையாக காணப்படுகின்றன. அவை மிகத் தொன்மையானவை, சங்ககாலத்தில் இருந்தே கூத்துக்கலையின் தொடர்ச்சியைக் காணலாம். இன்றைய நவீன உலகில் பாரம்பரிம் மிக்க கூத்துக்கலையானது அழிவினை நோக்கிச் செல்கின்றது அதனை பேணவேண்டுமென்பதில் பலரும் அக்கறையுடன் செயற்பட்டு வருகின்றனர்.ஆற்றுகைக் கலை மரபாகிய கூத்தின் இலக்கிய வடிவமாக அதன் எழுத்துப் பிரதிகள் காணப்படுகின்றன. அவ்வாறான எழுத்துப்பிரதிகள் பலவும் ஏட்டுருவில் இருந்து அழிந்துவிட்டன. அவை நூல் வடிவத்தினைப் பெறும்போதே பேணப்படும் என்பதனை யாவரும் அறிவர்.அதனால் பதிப்பு முயற்சிகள் மிகவும் அவசியமானவை.

ஈழத்தில் கத்தோலிக்க மதத்தினை பரப்ப வந்த குருமார் இங்கிருந்த சுதேசக் கலை இலக்கிய வடிவங்களை பயன்படுத்தி தமது மதக் கருத்துக்களை எடுத்தியம்பினர். அவ்வாறு அவர்களால் கூத்துமரபுகளும் பயன்படுத்தப்பட்டன.

அவ்வாறு அவர்களால் கூத்துக்கள் பயன்படுத்தபட்டபோது பூர்விகமான கூத்துக்கள் பல வடிவ உள்ளடக்க




மாற்றங்களைப் பெற்றன. கதைகள் கத்தோலிக்க புனிதர்கள் வேதசாட்சிகளின் கதைகளாக மாறின. அதேவேளை ஆடல்கள் படிப்படியாக இல்லாதொழிந்தும், பாடல்கள் செம்மை பெற்றும் அரங்கு, காட்சி விதானிப்பு எனப் பலவும் மாற்றங்களை உள்வாங்கி வடிவமாற்றம் பெற்றபோது அவை கத்தோலிக்க கூத்துக்கள் என அழைக்கப்பட்டன. திருச்சபையின் மேற்பார்வையோடு அவை மேற்கொள்ளப்பட்டபோது செம்மையும் செழுமையும் பெற்றன. அவற்றுக்கான எழுத்துருக்களும் செம்மைபெற்று இலக்கியத்தரத்தோடும் கவித்துவத்தோடும் அவை படைக்கப்பட்டன. இக்கூத்துக்கள் யாழ்ப்பாணம், மன்னார் பிரதேசங்களில் அதிகளவில் எழுதப்பட்டன. மன்னாரில் அவை *வடபாங்கு, தென்பாங்கு, வாசாப்பு,* என்று வகைமைகளாக காணப்பட்டன. யாழ்பாணத்தில் *தென்மோடிக் கூத்துக்கள்* என்றே அழைக்கப் பெற்றன.

இக்கூத்துக்களின் நீட்சியாக *விலாசம், சபா, ட்றாமா* என்ற வடிவங்கள் தோன்றினாலும் அவை முற்று முழுதாக அழிந்துவிட்டன.கூத்துக்கள் மட்டுமே நின்று நிலைக்கின்றன. ஒரு காலத்தில் விசுவாசத்தினை கட்டி எழுப்பிய இக்கூத்துகள் கத்தோலிக்க இலக்கியங்களாக மரபுரிமையின் எழுத்தாதரங்களாக, கூத்துக்கலை மரபின் சந்ததிக் கடப்புக்கான மூலாதாரங்களாகக் காணப்





படுகின்றன. இத்தகைய கூத்துக்கள் ஏட்டுருவில் இருந்து நூல் வடிவத்தினைப் பெறுதல் என்பது கட்டாய தேவையாகும்.

### முதல் கூத்து நூற்ப் பதிப்புக்கள்.

அச்சியந்திரங்கள் கண்டுபிடிக்கப்பட்டு ஈழத்தில் அவை அறிமுகமாகிய பின்னர் பல்வேறு நூல்கள் வெளியிடப்பெற்றன.கூத்துமரபில் இருந்து




பிற்பட்ட காலத்தில் உருவாகிய விலாச நாடகங்களே முதலில் பதிப்புப்பெற்றன. கத்தோலிக்க விலாச நாடகமாகிய 'எஸ்தாக்கியார்' நாடகமே முதல் பதிப்புக் கண்டது என்பர். சுவாமி ஞானப்பிரகாசியாரின் தந்தையார் தம்பிமுத்துப் பிள்ளை அவர்கள் பல விலாச நூல்களைப் பதிப்பு செய்துள்ளார்கள் அவற்றில் பெரும்பாலனவை தற்போது காணமுடியாதவையாகவுள்ளன.. எனினும் 1890 ஆம் ஆண்டு அவரின் அச்சுவேலி ஞானப்பிரகாசியார் அச்சியந்திரசாலையில் பதிக்கப்பெற்ற எஸ்தாக்கியார் விலாசமே பலபதிப்புக் கண்டு இன்றும் காணப்படுகின்றது.. ஆனால் முதற் கூத்து நூலாக வெளிவந்தது. அராலியூர் முத்துக்குமார புலவர் எழுதிய *தேவசகாயம்பிள்ளை நாட்டுக்கூத்து* ஆகும். இது 1926 ஆம் ஆண்டு வெளிவந்தது. இதன் பின்னர் ஆசிரியர் மு.வி. ஆசீர்வாதம் அவர்கள் அமரர் பூந்தான் யோசேப்பு அவர்களின் தூண்டுதலினால் பல கூத்து நூல்களை பதிப்புச்செய்தார். *எஸ்தாக்கியார்(1962) மரியதாசன் (1972), விஜயமனோகரன் (1968),தேவசகாயம் பிள்ளை(1974), மனம்போல் மாங்கலயம்(1976)* ஆகிய நூல்கள் பதிக்கப்பெற்றன. அதே நேரத்தில் இலங்கை கலைக்கழத்தின் தலைவராக இருந்த பேராசிரியர் சு. வித்தியானந்தன் அவர்கள் ஏட்டுருவில் இருந்த கூத்து நூல்களை பதிப்பு செய்து அண்ணாவி மாநாடுகள் போன்றவற்றை வைத்து கூத்துக் கலையின் எழுச்சிக்கு உதவினார். அவரால் மன்னார் பிரதேசத்தைச் சேர்ந்த *என்றிக் எம்பரதோர்(1964), மூவிராசாக்கள் (1966), ஞானசௌந்தரி (1967)* ஆகிய கூத்துக்கள் பதிப்புச் செய்யப்பட்டன. இத்தகைய முயற்சிகளுக்குப் பின்னர் தனிப்பட்டவர்களும் நிறுவனங்களும் பல கூத்து நூல்களை பதிப்புச்செய்துள்ளன. தொண்ணூறுகளுக்குப்பின் திருமறைக் கலாமன்றம் பல கூத்து நூல்களை பதிப்புச்செய்துள்ளது. பாஷையூர் மக்கள் தமது பிரதேசக்கூத்துக்கள் பலதையும் பதிப்புச்செய்துள்ளனர். ஆனால் பதிப்பு நடவடிக்கையானது பெரும் நிதி செலவுகளுடன் தொடர்புபட்டதாகக் காணப்படுகின்ற காரணத்தினால் எல்லோராலும் அவற்றினை வெளியிட முடிவதில்லை. வெளியிடுபவற்றை விற்பனை செய்வதும் பெருஞ் சவாலானது. எத்தனையோ ஏட்டுப் பிரதி




கள் யுத்தகாலத்தில் அழிந்துவிட்டன. எஞ்சியவையாவது பாதுகாக்கப்பட வேண்டுமாயின் பதிப்பு செய்யப்பட்டு நூல் வடிவத்தினைப் பெறவேண்டும். இதனை அரசு சார்ந்து செயற்படுத்தும் போதே வெற்றிகரமாக அமையமுடியும்.அதனால் பலரது கூத்துக்களையும், பழமையான கூத்துக்களையும் பதிப்பு செய்வதற்கும் சாதகமாக அமையும். அந்த வகையில் வடமாகாண கலாசார அமைச்சு மேற்கொண்ட நடவடிக்கையானது வரவேற்கத்தக்க செயற்பாடாகும்.

### புதிதாகப் பதிப்பு பெற்ற நூல்கள்

கடந்த வருடம் (2017) வடமாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களம் மன்னார் பிரதேசத்துக்குரிய பின்வரும் மூன்று வடபாங்கில் (யாழ்ப்பாணப் பாங்கு) அமைந்த கூத்து நூல்களை பதிப்பித்து வெளியீடு செய்துள்ளது.

**1.இம்மனுவேல் நாடகம்:-**

மாதோட்டத்தைச் சேர்ந்த புலவர் சமியேல் பிரகாசம் அவர்களால் 1950 களில் எழுதப்பட்ட இவ் இம்மானுவேல் நாடகம். இத்தாலி நாட்டை ஆண்ட மல்கறித்து என்னும் மன்னன் பிற சமயத்தில் இருந்து கிறிஸ்தவனாக மாறி இம்மனுவேல் எனப் பெயர் தரித்த வரலாற்றினை அடிப்படையாகக் கொண்ட கற்பனை கதையைப் பாடுபொருளாகக் கொண்ட நாடகமாகும்.

**2.என்டிறீக் எம்பரதோர் நாடகம் :-**

அடம்பனைச் சேர்ந்த கீத்தாம்பிள்ளை புலவர் அவர்களினால் 1798 அளவில் வடபாங்கு கூத்தாக எழுதப்பெற்ற என்டிறீக்கு எம்பரதோர் நாடகமானது இரண்டு இரவுக் கூத்தாகும். உரோமையை ஆண்ட என்டிறிக் மன்னனின் மனைவிக்கு வருகின்ற சோதனைகளும் அவள் கற்புக்கு வருகின்ற சவால்களும் இறுதியில் தேவ தாயார் அருளால் அவள் காக்கப்பட்டு பகைவர் மனந்திருப்பட்டு அவள் கற்புக்கரசியாக கொண்டாடப்படும் கதைக் கருவைக் கொண்ட நாடகமாகும்

**3.புனித சந்தியோகுமையோர் நாடகம் :-**

நாவாந்துறையைச் சேர்ந்த கிறிஸ்தோ மரியாம்பிள்ளைப் புலவரும், முருங்கனைச் சேர்ந்த மரியான் சந்தான் புலவரும் இணைந்து எழுதிய இப் புனித சந்தியோகுமையோர் நாடகமும் வடபாங்கில் அமைந்த இரண்டு இரவுக் கூத்து ஆகும். பெரிய யாகப்பரின் கதையினை அடிப்படையாகக் கொண்ட இந்தக் கூத்து 1940களில் எழுதப்பட்டுள்ளது. பெறுமதி வாய்ந்ததாகிய இத்தகைய கூத்து நூல்களை இனங்கண்டு சிறப்பான அச்சாக்கமாக வெளியீடு செய்துள்ள பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தினையும் இதற்கு தூண்டுதலாக அமைந்தவர்களையும் பாராட்டவேண்டும். அது மட்டுமன்றி இவ்வருடமும் பறப்பாங்கண்டல் பிரதேசத்தில் பயிலநிலையில் இருந்து வந்த சந்திரகாசன் நாடகமும், நானாட்டன் பிரதேசத்தில் வழங்கி வந்த மரியகிருதாள் நாடகமும் வெளியிடப்படவுள்ளது. என்பதனை அறியக் கூடியதாகவுள்ளது. ஏட்டுருவிலே கிடந்து அழிவை நோக்கிச் சென்ற எமது கலை இலக்கியங்கள் எமது மரபுரிமைகளை இவ்வாறு நூலாக்கம் செய்கின்ற நடவடிக்கையானது வரவேற்கத்தக்கதாகும்.

ஒப்பீட்டு ரீதியில் மன்னார்

காவலூர் யோவான்

பிரதேசத்திலேயே அதிகமான பாரம்பரிய நாடக எழுத்துருக்கள் இன்றும் காணப்படுகின்றன. குறிப்பாக பழைமையான ஏடு வடிவத்திலேயே அவை பேணப்பட்டும் உள்ளன. அவை நூலுருவாக்கம் பெறுவது மிகவும் அவசியமானது. மன்னாரின் பல்வேறு கிராமங்களிலும் இவ்வாறான ஏடுகள் காணப்படுவதாக பல ஆய்வாளர்கள் குறிப்பிடுகின்றனர். எனவே இச் செயற்பாடு தொடர்ச்சியாக மேற்கொள்ளப்படும் போது இவ் ஆவணங்கள் பாதுகாக்கப்படும்.

யாழ்ப்பாணப் பிரதேசத்தில் பல்வேறு இடப்பெயர்வுகளும் யுத்த அழிவுகளும் இவ்வாறான பழைமையான நாடக ஆவணங்கள் பலவற்றையும் அழித்துவிட்டமை துரதிஷ்டவசமானது. எனினும், பலரது முயற்சியினால் பேணப்பட்ட பல கூத்து நூல்கள் அச்சிடப்படாமல் இருக்கின்றன. அவற்றினையும் வெளியிடும் முயற்சிகளை திணைக்களம் மேற்கொள்ளுமாயின் பெரும் பயனாய் அமையும்.

# காவலன் கலசம்

# தனிமையுணர்விலிருந்து மீள எழுவோம்

அம்மா, அப்பா, பாட்டன், பாட்டி, பேரன், பேர்த்தி என கூட்டுக்குடும்பமாக வாழ்ந்த காலங்கள் நம்மை விட்டு கடந்து போய்விட்டன. தற்போது பேசுவதற்கும், சுக துக்கங்களை பகிர்வதற்கும், கோபத்தை வெளிப்படுத்துவதற்கும் கூட ஒரு நபர் கிடைப்பது அரிதாக உள்ளது.

நவீன விஞ்ஞான யுகத்தில் எல்லா வசதிகளும் கிடைத்து எல்லாமே வீட்டிற்குள் கிடைக்கும் அளவிற்கு வளர்ச்சி ஏற்பட்டுள்ளது. கணவன் மனைவி ஒரிரு பிள்ளைகள் கதைப்பதற்கு நேரமில்லாத நிலமை ஒவ்வொருவரும் தம் தம் கடமைகளில் ஈடுபட்டுக்கொண்டிருக்கின்றனர். நாள் முழுவதும் வேலை வீடு வந்தால் தொலைக்காட்சி முன் அமர்வது, கணனி கைபேசி என்பவற்றுடன் தமது பொழுதைக் கழிப்பது என மனித வாழ்வு சுழன்று செல்கின்றது.

உலகையே உள்ளங்கைகளில் அடக்கும் தொலைபேசிகள் கணனிகள் வருகை தந்ததால் உள்ளறையிலிருந்தே உலகை சுற்றி வரலாம். ஆனால் எம்முள் உறையும் உள்ளத்தை தொடுவதற்கு யாருமே இல்லாமல் போய்விட்டது. இது தான் தனிமை ஒரிருவருக்கானது மட்டுமல்ல உலகளவில் பிரச்சினையாக இன்று ஊடுருவியுள்ளது.

தனிமையென்பது ஆளுக்காள் வேறுபடுகின்றது. கணவன் இறந்து விட பெற்ற பிள்ளைகள் வெளிநாடு சென்று விட நான்கு சுவர்களுக்குள் அடைபட்டுக்கிடக்கும் தாயின் தனிமை ஒருவிதமானது.

வகுப்பறை முழுவதும் சக மாணவர்கள் இருந்தாலும் அவர்களுடன் நட்பை பெறமுடியாத நிலையிலுள்ள பாடசாலை மாணவர்களின் தனிமை வேறொரு வகையானது.



தனிமை என்பது உடல் ரீதியாக தனித்திருப்பதை குறிக்கும். ஆனால் தனிமையுணர்வு என்பது ஒரு மனநிலையாகும். அதாவது ஒரு வெறுமையுணர்வு அல்லது சூழலிலிருந்து தனிமைப்பட்டதான உணர்வு எனலாம்.

**தனிமையுணர்வு ஏற்படுவதற்கான காரணங்கள்:-**

❖ முற்றிலும் புதிய சூழலுக்கு இடம் மாறுதல்.
❖ நம்பிக்கைக்குரியவர் ஒருவர் கிடைக்காமலிருத்தல்.
❖ பிறரிடமிருந்து ஒதுங்கி வாழும் பழக்கம்.
❖ திடீரென குடும்ப உறவுகளில் ஏற்படும் பிரிவு.
❖ நெருங்கிய நண்பரின், உறவினரின் பிரிவு.
❖ தாழ்வு மனப்பான்மை கொண்டிருப்பது.
❖ புதிய தொழிலில் இணைத்து கொள்ளும் போது.

தனிமையுணர்வு ஏற்படும் ஒருவருக்கு உடல் ரீதியாகவும், உள ரீதியாகவும் பல பாதிப்புக்கள் ஏற்பட வாய்ப்புண்டு தலைவலி, நெஞ்சுவலி, வயிற்றுவலி, சோர்வு, பசியின்மை, அடங்காத பசி, பாலியல் குறைபாடு, தூக்கமின்மை, கோபம், படபடப்பு, தனது கடமைகளை ஒழுங்காக செயற்படுத்த முடியாத நிலை. என்பன அவற்றுள் சிலவாகும். இவை மன அழுத்தம் ஏற்படவும் காரணமாகின்றது.

❖ எமது உணர்வுகளை மற்றவர்களுடன் பகிர்வதில் பின் நிற்கும் போது மன அழுத்தம் அதிகரிக்கின்றது.
❖ தகாத வார்த்தைகளை பொருத்தமற்ற வேளையில் வெளிப்படுத்தி குடும்ப நட்பு உறவுகளில் விரிசல் ஏற்படுகிறது.
❖ தூக்கக் குறைபாடு ஏற்படுவதால் பகல் நேரத்தில் சோர்வும் ஏற்படுகிறது.
❖ மறதி ஏற்பட்டு கற்றல் செயற்பாடுகள் பாதிக்கப்படலாம்.
❖ சரியான தருணத்தில் சரியான தீர்மானங்களை எடுப்பதில் தாமதமும் சிரமமும் ஏற்படலாம்.
❖ எரிச்சல் மன அமைதியின்மை, மன விரக்தி ஏற்படுவதால் வாழ்வினில் வெறுப்பும், வாழமுடியாத நிலைக்கு தம்மை ஆளாக்கிக்கொள்கின்றனர்.
❖ மது போதை, புகைத்தல் என்னும் பழக்கங்களுக்கு தம்மை ஈடுபடுத்தி அடிமையாகும் சாத்தியம் ஏற்படுகின்றது.
❖ பக்கவாதம், மாரடைப்பு ஏற்படுவதற்கும் ஏதுவாகின்றது.
❖ உயர் இரத்த அழுத்தம், இதயத்துடிப்பு மாற்றம், தசைப்பிடிப்பு என்பனவும் ஏற்பட வாய்ப்புண்டு.

**தனிமையிலிருந்து விடுபட வழிமுறைகள்.**

1. மனதிற்கு பிடித்த விடயங்களுக்கு மனதைத் திசை திருப்புதல் வேண்டும்.
உ+ம் :- விளையாட்டு, ஆன்மீகம், இசை, சமையல்.
2. நெருக்கமானவர்களுடன் தன் உணர்வுகளை பகிர்ந்து கொள்ளல்.
3. உடல் உழைப்பு, உடற்பயிற்சி, தியானம் போன்றவற்றில் ஈடுபடுதல்.
4. இதனை விட சுவாசப்பயிற்சியும் மன அழுத்தத்திலிருந்து விடுபட உதவும்.
5. தம் உணர்வுகளை விட பிறரின் துன்பங்களையும் இயலாமைகளையும் கவனத்தில் எடுத்துக்கொள்ளல்.
6. மனதிற்கு பிடித்தபடி சமூக சேவையில் ஈடுபட்டு மனதிருப்தி அடையலாம்.
7. எப்போதும் நேரான எண்ணங்களை வளர்ப்பதுடன் நல்லதே நடக்கும் என்னும் நம்பிக்கையை ஏற்படுத்தல்.
8. ஒத்த சிந்தனைகளும் உணர்வுகளும் உள்ளவர்களுடன் உறவை ஏற்படுத்திக் கொள்ளல். ஏற்கனவே உள்ள உறவை வலுப்படுத்தல்.
9. பிறரை பாராட்டுதல், செவிமடுத்தல் மூலம் சுற்றுச் சூழலிலுள்ளவர்களுடன் புதிய உறவுகளை வளர்த்துக்கொள்ளல்.
10. தனிமையை தவிர்க்க தொலைபேசி, இணையம் மூலம் நண்பர்களுடன் தொடர்பு ஏற்படுத்தி மகிழ்ச்சியான மன நிலையை ஏற்படுத்திக்கொள்ளலாம்.
11. தன்னைப்பற்றிய சுயமதிப்பை உயர்வாக வைத்திருத்தல். தனது ஆற்றல், திறமைகள், உடலழகு, தொழில், தகுதி என்பவற்றைப்பற்றி பெருமைப்படுவதுடன் திருப்தியும் பெற்றுக்கொள்ளல்.
12. உறவுகளில் பிரிவு ஏற்படும் போது தம் துக்கத்தை மறைக்காமல் அழுகை மூலம் வெளிப்படுத்தல். நெருக்கமான நண்பர்களுடன் எம் சோகத்தை பகிர்ந்து கொள்ளல்.

இவ்வாறு தனிமையுணர்விலிருந்து பல சந்தர்ப்பங்களில் விடுபட முடியும். மனதில் திடமும், தன் ஊக்கமும் இருந்தால் மன அழுத்தத்தை விரட்டி அடித்து தனிமையுணர்விலிருந்து விடுபட முடியும். அப்பொழுது நீங்கள் மட்டுமல்ல உங்களைச் சுற்றி இருப்பவர்களும் மகிழ்ச்சியாக நம்பிக்கையோடு வாழ வழி பிறக்கும். நாமும் வாழ்ந்து, பிறரையும் வாழ வைப்போம்.

அருட்சகோதரி ரோமனா அன்ரனி (HC)

# மாபெரும் கிறிஸ்தவ ஓவியர் மைக்கல் அஞ்சலோ



மைக்கல் அஞ்சலோ டி லொடோவிக்கோ புவோனரோட்டி சிமோனி ஒரு இத்தாலிய மறுமலர்ச்சிக்கால ஓவியரும், சிற்பியும், கவிஞரும், கட்டிடக் கலைஞருமாவார். இவரது கலை சார்ந்த பல்துறைத் திறமையின் உயர்ந்த தரம் காரணமாகச் சமகாலத்தவரான லியானார்டோ டாவின்சியுடன் சேர்ந்து இவரும் மறுமலர்ச்சிக் காலத் தந்தையெனக் கணிக்கப்படுகின்றார். மைக்கல் அஞ்சலோவின் நீண்ட கால வாழ்க்கையில் அவர் படைத்தவைகள் அனைத்தும் அவரது அறியத்தக்க திறமைக்குச் சான்றாக அமைகின்றன. கடிதத் தொடர்புகள், வரைபடங்கள் நினைவுக் குறிப்புக்கள் என இவர் எழுதிக் குவித்தவை ஏராளம். இவைகளையும் சேர்த்தால் 16ம் நூற்றாண்டில் அதிகமாக ஆவணப்படுத்தப்பட்ட கலைஞர் இவரே எனலாம்.

15ம் நூற்றாண்டில் இத்தாலி பல மாநிலங்களாகப் பிரிந்து பணம் படைத்த உயர் குடும்பங்களால் ஆளப்பட்டது. கலைஞர்கள் அவர்களின் சொற்படி இராணுவப் போர், வேட்டைக்காட்சிகள், திருமண ஊர்வலம், கானிவேல் விழா போன்றவற்றை வரைந்தார்கள். இத்தாலியில் கிராமிய வாழ்க்கையின் ஒரு புறம் பல உள்நாட்டு யுத்தங்கள் நிறைந்ததாயினும் மறுபுறம் பழமையை ஆய்வதிலும் புதிய கல்வித்துறை ஆக்கங்களை மேற்கொள்வதிலும் ஈடுபாடு காட்டப்பட்டன. இதையே மறுமலர்ச்சி என அழைக்கிறோம். இந்நூற்றாண்டில் உரோமை வர்ணக்கலையினால் தூரிகை கொண்டு அசைவுபடுத்திடவென புளோரன்சில் உதித்தான கலைச்செல்வனாக 1475 இல் லோடாவிகோ இவருக்கு இரண்டாவது மகனாக மைக்கல் அஞ்சலோ புனரோடட்டி சிமோனி - மார்ச் மாதம் 6ம் திகதி அரினோவில் உள்ள கேப்ரீஸ் எனும் குக்கிராமத்தில் பிறந்தார். புளோரன்சின் கல்லுடைப்போன் ஒருவரின் மனைவியான ஒரு செவிலியிடம் மைக்கல் அஞ்சலோ வளர்ந்து வந்தார். இளமையில் கலை உள்ளம் கொண்ட இவர், தான் கலைஞனாக வேண்டுமென்ற ஆதங்கத்துடன் வளர்ந்து வந்தார். ஆனால் லோடோவித்கோவும், பிரான்சிஸ்கோவும் வைக்கல் அஞ்சலோ ஒரு கலை ஞன் ஆவதை ஏனோ விரும்பவில்லை. தங்கள் குடும்ப கௌரவத்திற்கு இழுக்காக அதை நினைத்தனர். இக்காலப் பகுதி யிலே தந்தை லோடோவிக்கோ புனரொட்டி இரண்டாவது திருமணம் செய்து கொண்டார். 1488ல் லோடோவிக்கோ புனரொட்டி தன் மகன் மைக்கல் அஞ்சலோவை ஓவியம் கற்றுக் கொள்வதற்கு கலைப் பட்டறை ஒன்றிற்கு அனுப்பினார். இவரது ஆர்வமும் ஊக்கமும் இவரை இளம்வயதிலேயே பெரும் ஓவியராகவும், சிற்பியாகவும் ஆக்கிக்கொண்டது. 1496ல் உரோமிற்கு வந்து மிகவும் வறுமையில் உழன்றார். இக்காலப்பகுதியிலே "பக்கஸ்" என்னும் சிற்பத்தினை செய்து கல்லி என்னும் வங்கி நபர் ஒருவருக்கு இச் சிற்பத்தினை விலைக்கு விற்றார்.

"நான் ஒரு ஓவியன் அல்ல; எனது தொழில் ஓவியமும் அல்ல" என்று அடிக்கடி கூறிக்கொண்ட மைக்கல் அஞ்சலோவால் தான் உலகம் வியக்கும் பிரமாண்ட ஓவியங்களை வரைய முடிந்தது. ஓவியங்களை உளி கொண்டு செதுக்கினார். இவரது ஓவியங்களும், சிற்பம் போன்றே திரட்சித்தன்மை கொண்டு காணப்பட்டது. தலை சிறந்த ஓவியனாகவும் சிற்பியாகவும் திகழ்ந்த போதும் தன்னை ஓர் சிற்பி என்று அழைப்பதிலேயே பெருமைப்பட்டார். இதற்குச் சான்று தான் வரைந்த ஓவியங்களிலோ அல்லது ஓவிய சிற்பங்களுக்கான ஒப்பந்த படிவங்களிலோ சிற்பி மைக்கல் அஞ்சலோ என்றே கையொப்படமிடுவார்.

இவர் ஒரு மாபெரும் ஓவியன், சிற்பி, கட்டிடக்கலைஞன் மட்டுமல்ல ஒரு கவிஞனும் கூட. வாடிகன் நகரத்து சிஸ்ரைன் தேவாலய விதானத்தின் பரன் மீது மல்லாந்து படுத்திருந்து ஓவியங்களை தீட்டும் போது தலையில் கட்டியிருந்த துணி கழன்றதும் ஆடைகள் வயிற்றுக்கு கீழ் போனதும் தெரியாது அவர் ஓவியத்தில் மூழ்கியிருந்தார்.

ஓவியத்தின் வெளிச்சத்தில் சிற்பங்களை செதுக்கி பழகியவர் மைக்கல் அஞ்சலோ. இவரது ஓவியங்கள் பல வர்ணங்கள் நிறைந்ததாகவும், ஓவியங்களின் முகத்தில் கருணையும், அமைதியும், தவமும் குடி கொண்ட உயிரோவியங்களாக திகழ்ந்தன. ஓவியங்களில் வரைந்த தசைத்திரட்சி, ஆடை மடிப்புக்கள் என்பன தொட்டுப்பார்க்கத் தோன்றும் நிலைக்கு சிற்பங்கள் போன்றே காட்சியளிக்கின்றன. ஓவியங்களை கைநிறுத்தி "ஓவியர்களே நீங்கள் சிற்பங்களை செதுக்கிப்பழகுங்கள்" என்று அடிக்கடி கூறுவார். சிஸ்ரைன் போலின் தேவாலயங்களில் ஓவியங்களை படைத்த இவர் தனது மரணத்தின் போதும் தான் ஒரு சிற்பி என்று அழைக்கப்படுவதிலேயே பெருமையடைந்தார்.

18வது வயதினில் பியற்றா சிற்பத்திற்கான ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டது. இதனை ஒரு வருட காலத்திற்குள் முடிப்பதாகவும் அத்துடன் இதுவரை யாருமே செய்திராத அழகிய சலவைக் கல் சிற்பமாக இது அமைய வேண்டுமெனவும் ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டது. கிளிப்பிள்ளை போல் சொன்னதைச் செய்து, இதுவரை யாரும் கண்டிராத மிக அபூர்வமான அற்புதமான உலகப் புகழ் வாய்ந்த பியற்றா சிற்பத்தினை இவர் செதுக்கினார்.



(தொடரும்....)

அ.ஸ்ரெபான் றொக்சன்
புனித பத்திரிசியார் கல்லூரி

## இல்லறம் காப்போம்

# ஆரோக்கியமான குடும்ப வாழ்விற்கு பத்தியம்

உணவின்றி எதுவுமே வாழ்வ தில்லை. உணவின்றி அணுவும் அசையாது. தீய பழக்கவழக்கங்களும் தீய எண்ணங்களும் கூட உணவின்றி வாழ்வதில்லை. தெரிந்தோ தெரி யாமலோ எமது தீய நாட்டங்களுக்கு நாங்கள் உணவு போடுகின்றோம். அதற்கான உணவை நாங்கள்

எனவே குடும்பமாக சேர்ந்து மிக உயர்ந்த உன்னதமான இலக்குகளை அமைத்து செயற்படுகின்ற பொழுது நன்மைகள் ஏராளம். இதை பகிர்ந்து

காரணமாக இருக்கின்றது. எனவே நாங்கள் குடும்பமாக சேர்ந்து எமது ஐம்புலன்களுக்கு நல்லாரோக்கியமான விடயங்களை கொடுக்கின்ற பொழுது வாழ்வு வளம் பெறுகின்றது.

வழிவகுக்கும். உள்ளத் தின் ஆழத்தில் எழுகின்ற நல்லெண்ணங்களை வளர்க்க வேண்டும். தீய நாட்டங்களை முற்றிலும் தவிர்க்க வேண்டும். சுயகட்டுப்பாடுகள் மூலம் நிறைய நன்மைகளை நாம் அனுபவிக்க முடியும். எனவே இறைவனின் ஆசீரோடு எமது உள்ளத்தை நல்லெண்ணங்களால் நிரப்பி வாழ்வை வளமாக்குவோம்.

**ஊட்டமுள்ள உணவு.**

குடும்பமாக சேர்ந்து ஒரு சில உணவு வகைகளை முற்றிலுமாக தவிர்த்து விடுவது குடும்ப வாழ்விற்கு நலம்பயிக்கும். உதாரணமாக இராசாயன கலவைகள் சேர்க்கப்பட்ட உணவு வகைகள் சுவையூட்டிகள் சேர்க்கப்பட்ட உணவு வகைகள், சீனி, கொழுப்பு நிறைந்த உணவு வகைகளை தவிர்த்து விடுவது ஆரோக்கியத்திற்கு வழிவகுக்கும். அதே போல குடும்பமாக சேர்ந்து தீர்மானித்து நிறைய தானிய வகைகள், மரக்கறி வகைகள், பழவகைகள் இவற்றை நாங்கள் உட்கொள்கின்ற பொழுது உடலில் நல்ல சுகமும் உள்ளத்தில் நல்ல எண்ணங்களும் உதயமாகும்.

எனவே குடும்பப் பத்தியம் என்பது உணவு வகைகளைத் தவிர்ப்பது மட்டுமல்ல நல்ல ஆரோக்கியமான உணவு-களை உட்கொள்வதோடு நல்ல எண்ணங்களையும், நல்ல சொற்களையும், நல்ல நடத்தை களையும் குறித்து நிற்கின்றது. அடிப்படையில் எல்லாத் தீயவற்

அருட்பணி சிங்கராயர் ஸ்ரீவன் (CMF)

றையும் தவிர்த்து நன்மையை மட்டுமே பற்றிக் கொள்வது குடும்ப பத்தியமாகும். நல்ல வார்த்தைகளைக் கதைப்பது, தீய வார்த்தைகளைத் தவிர்ப்பது இதுவும் ஒரு சிறந்த பத்தியமே. தனித்தனியாக முயற்சி செய்கின்ற பொழுது நாங்கள் தளர்ந்துபோக வாய்ப்புண்டு. குடும்பமாக சேர்ந்து தீர்மானித்து அர்ப்பணத்தோடு பத்தியத்தை கடைப்பிடிக்கின்ற பொழுது நன்மைகள் ஏராளம்.

தவிர்க்கின்ற பொழுது அந்தத்தீய நாட்டங்களும் தீய எண்ணங்களும் கூட இறந்து மறைந்துபோய்விடும்.

பத்தியம் என்று கேள்விப்பட்ட துமே எங்களுடைய மனக்கண்முன் வருவது நோயாளிகளே. ஆனால் ஆரோக்கியமான எந்த வாழ்விற்கும் சிறந்த பத்தியம் மிகவும் முக்கியமாகும். எமது குடும்பம் ஆரோக்கியமாக வாழவேண்டும் என்று சொன்னால் சில உணவுகளைத் தவிர்த்து நல்ல ஊக்கம் தருகின்ற ஊட்டமளிக்கின்ற உணவுகளை உண்ண வேண்டும். அதேபோல நல்ல எண்ணங்களையும் ஆழமான ஆன்மீகப் பண்புகளையும் உள்வாங்கி தியானிக்கின்ற பொழுது எங்களது சொல் செயல் நடத்தை ஆரோக்கியமானதாக அமையும்.




**வாழ்வில் உயர்ந்த நோக்கம்.**

வாழ்வில் உயர்ந்த நோக்கங் களை அமைத்து செயற்படுகின்ற பொழுது தீய நாட்டங்கள் படிப்படியாக மறைந்து போகின்றது. வாழ்வில் அந்த உயர்ந்த நோக்கத்தை அடைய இயல்பாகவே நல்ல மதிப்பீடுகளை படிக்க பயிற்சி செய்ய தேர்ச்சி பெற தூ ண்டப்படுகின்றோம். நல்லவற்றை நாங்கள் வாசிக்க தியானிக்க திட்டமிட முனைகின்றோம். எனவே படிப்படியாக தீமையின் நாட்டம் குறைந்து நன்மை செய்ய வேண்டுமென்ற ஆவல் எம்மில் அதிகரிக்கின்றது. எனவே நல்ல நோக்கத்தை நோக்கி செல்வதும் ஒரு சிறந்த பத்தியமே.

வாழுகின்ற பொழுது எமது குடும்பம் நலம் பெறுகிறது. வளமடைகின்றது.

**ஐம்புலன்கள்**

எமது ஐம்புலன்கள் மூலமாக நாங்கள் உள்வாங்குகின்ற எண்ணங் கள், படங்கள், செய்திகள் எமது சிந்தனையில் செல்வாக்குச் செலுத்துகின்றன. எனவே எதைப் பார்ப்பது, எதைப் பார்க்கக்கூடாது என்று குடும்பமாகச் சிந்தித்துச் செயற்படுவது ஒரு குடும்ப பத்தியமே. மற்றவர்களைப் பற்றி கதைப்பது, தீயவற்றைச் சிந்திப்பது, தீயவற்றைக் கேட்பது எல்லாமே எமது வாழ்க்கை யின் எழுச்சிக்கோ வீழ்ச்சிக்கோ

குடும்பம் நலம் பெறுகின்றது.

**ஆழ்மன எண்ணங்கள்**

எங்களுடைய உள்ளத்தின் ஆழத்தில் கடந்தகால அனுபவங்கள் உயிரோடு புதைக்கப்பட்டிருக்கின்றன. ஒருசில ஆரோக்கியமான ஞாபகங்களும் புண்பட்ட அனுபவங்களும் அதில் அடங்கும். எனவே புண்பட்ட அனுபவங்களை மேலும் மேலும் புண்படுத்தாமல் அதைக் குணப்படுத்தி ஆற்றுப்படுத்தி வாழ்வதும் ஒரு பத்தியமே. நல்ல எண்ணங்களை நாங்கள் பாராட்டி ஊக்குவிப்பதும், உள்ளத்தில் ஆழமான அமைதி, அன்பு, கருணை, தாழ்ச்சி, புரிந்துணர்வு நீடித்து நிற்க

---

## அன்னை மரியாள்....

(4ம் பக்கத் தொடர்ச்சி)

**உண்மைச் சுதந்திரத்திற்கான அழைப்பு**

(Call to True Freedom)

இளைஞர்கள் சுதந்திரமாக இருக்கவே எப்போதும் விரும்புகின்றனர். இதற்கு தடையாக இருப்பவர்களை அல்லது இருப்பவற்றை அவர்கள் எதிர்க்கின்றார்கள். ஆனால் துரதிஷ்ட வசமாக அவர்களது உணர்ச்சிவசப்பட்ட சுதந்திரத்திற்கான தேடலில் அவர்களது தனிப்பட்ட உணர்வுகளும் சுயநலமும் அடிக்கடி அவர்களை அடிமைப்படுத்தி சிறைப்படுத்தி விடுகின்றன.

உண்மையான சுதந்திரம் தாம் விரும்பும் எதையும் செய்வதல்ல: மாறாக நல்லதை செய்வதே ஆகும். அன்னை மரியாள் இறைவனுடைய திட்டத்திற்கு முன்னுரிமை கொடுப்பதிலும், அயலவர்களுக்கு நன்மை புரிவதிலுமே உண்மையான சுதந்திரத்தை தன் வாழ்வில் அனுபவித்தாள். தன்னிலை சார்ந்த அல்லது சுயநலம் சார்ந்த எதுவும் தன்னுடைய உள்ளார்ந்த சுதந்திரத்தை பறிக்க அவள் அனு மதிக்கவில்லை. ஒவ்வொரு இளைஞ னும் தன் முன்மாதிரியை பின்பற்றி வாழவேண்டுமென அன்னை விரும்புகின்றாள்.

உண்மையான உள்ளார்ந்த சுதந்திரம் வெளித்தாக்கங்களற்ற சுதந்திரமான முடிவெடுத்தலில் வெளிப் படுத்தப்பட வேண்டும். அந்தவகையில் அன்னை மரியாளில் சுதந்திர தெரிவுக்குரிய, முடிவெடுத்தலுக்குரிய முன்னுதாரணத்தை கண்டு கொள்ள முடியும். கபிரியேல் வானதூதர் இறை வனுடைய திட்டத்தை அறிவித்த பொழுது, "இதோ ஆண்டவருடைய அடிமை, உமது வார்த்தையின் படியே எனக்கு ஆகட்டும்" என கூறுவதற்கு முன்பு, வானதூதரோடு நேரடியாக உரையாடி, சுதந்திரமாக முடிவெடுக்கும் தன்மையை உபயோகிக்கின்றாள். மேலும், யூதர்களுடைய கலாசாரத்தில், அன்னை மரியாள் எடுத்த முடிவானது துணிச்சலானதொன்று. அத்தோடு அன்னையினுடைய பாடலில் சமூக, ஆன்மீக மற்றும் பொருளாதார மாற்றத்திற்கான சிந்தனைகள் வெளிப்படுத்தப்படுவதையும் நாம் காணக்கூடியதாக உள்ளது. இன்னும், இயேசுவைப் பெற்றெடுப்பதற்கும் அவரைப் பாதுகாப்பதற்கும், அவள் சந்தித்த சவால்கள் மத்தியிலும் அவள் மேற்கொண்ட துணிச்சலான தெளிவான முடிவுகள் இன்றைய இளைஞர்களுக்கு முன்மாதிரியாக விளங்குகின்றது.

**தேவையில் உள்ளவர்களை தேடிச் செல்லல்**

(Reaching out to the Less Fortunate)

இறைவனின் தாய் என்று தன்னிடம் உதவிகேட்டு வரும் முன்பே, தேவை யில் உள்ளவர்களை தன்னு டைய கரிசனை நிறைந்த அன்பினால் தேடிச் சென்று உதவி செய்பவளாகக் காணப்படுகின்றாள் அன்னை மரியாள். வயோதிபத்தில் கருவுற்று இருந்த உறவி னராகிய எலிசபெத்தை தேடிச் சென்று அவரோடு தங்கியிருந்து பரா மரிக்கின்றாள். கரிசனையுள்ள நண்பி யாக, கானாவூர் திருமண விழாவில் ஏற்பட இருந்த குறையை நீக்க, தானா-கவே முன்வந்து தம் திருக்குமாரனிடம் பரிந்து பேசுகின்றாள். அன்பு செய்யும் தாயாக மூடப்பட்ட அறைக்குள் அச்சத்தி னால் பயந்திருந்த சீடர்களுடன் இருக்கின்றாள்.

இவ்வாறு பிறர்மேல் கொண்ட அன்பை தம் அன்புச் செயல்களில் வெளிப்படுத்தும் இளைஞர்கள் மற்றும் இளைஞர் குழுக்களுக்கு அன்னை மரியாள் உயர்வான முன்மாதிரியாக விளங்குகின்றாள்.

**மரியே! எல்லாம் உமக்கே**

(Totus Tuus: "All Yours," O Mary)

அன்னை மரியாள், தான் தனது திருக்குமாரனை அன்போடு தன் உள்ளத்தில் ஏற்றுக் கொண்டு உதரத்தில் கருத்தாங்கியது போன்று, வாழ்வின் முழுமுதல் நிறைவாகிய கிறிஸ்துவில் ஆழமாக உறவு கொண்டு வாழ ஒவ்வொரு இளைஞனையும் அதே அன்போடு வரவேற்கின்றாள். தம்முடைய மகனாகிய கிறிஸ்துவோடு தனித்துவமானதொரு உறவுக்குள் செல்வது ஒவ்வொரு இளைஞனுடைய ஆன்மீக வாழ்விலும் ஒரு திருப்புமுனை யாக அமையும் என விரும்புகின்றாள். இளைஞர்களே! பாவத்திற்குள் நீங்களே உங்களை தொலைத்து விடும் போது, உங்களை தேடிவரும் தாயாக அன்னை மரியாள் விளங்குகின்றாள் (லூக் 2:41-50). அத்தோடு, இயேசுவின் நட்புறவில் நீங்கள் மீண்டும் இணைவ தற்கு உதவுகின்றாள்.

கல்வாரி மலையில் இளமைத் துடிப்புடன் இருந்த தம் அன்புச் சீடர் யோவானை, இயேசு "இதோ உம் மகன்" என்று தம் அன்னை மரியாளிடம் ஒப்படைத்ததன் வழியாக, அன்னை மரி யாள் திருச்சபையின், குறிப்பாக இளை-யோர் அனைவரினதும் தாயாக விளங்குகின்றாள். மேலும், தன்னுடைய தாயை இயேசு இளமைத் துடிப்புள்ள யோவானுடைய பராமரிப்பில் ஒப்படைப்பதையும், அவர் அன்னை மரியாளைத் தம் வீட்டில் ஏற்றுக் கொள்வதையும் நாம் திருவிவிலியத்தில் வாசிக்கின்றோம் (யோவா 19:26-27). இந்த வார்த்தைகள் யோவான் அன்னை மரியாளை தமது சொந்த தாயாக ஏற்றுக்கொண்டு, உள்ளத்திலிருத்தி வாழ்ந்ததை எடுத்துக்காட்டு கின்றன.

எனவே, இளைஞர்களே! ஆண்ட வர் இயேசு தமது சொந்தத் தாயாரை உங்களுக்கு தனிப்பட்ட கொடையாக கொடுத்திருக்கின்றார். இதனால், அவருடைய தாய்க்குரிய இடைவிடாத பிரசன்னத்தை உங்கள் தனிப்பட்ட வாழ்விலும் உணர்ந்து, "அனைத்தும் உம்முடையதே, மரியே!" என்ற புனித இரண்டாம் அருள் சின்னப்பரின் விருதுவாக்கை உமதாக்குங்கள். புனித பேனாட் அழகாக கூறுவார், "அன்னை மரியாளை உங்கள் சிந்தையில் இருத்துங்கள்; ஆண்டவர் இயேசு உங்கள் இதயத்தில் வளர்வார்".



# யாழ்ப்பாண மறைமாவட்டம் ஒரு வரலாற்றுப் பார்வை
## பின்னணி, தோற்றம், வளர்ச்சி

(சென்ற இதழ் தொடர்ச்சி)

**செமேரியா அ.ம.தி. அடிகளுக்கும், கோவா ஒரட்டோரியன் சபைக் குருக்களுக்குமிடையிலான உறவு நிலை**

இதற்கிடையில் இடையிடையே பிரிவினைவாதிகளின் கையோங்கவும் செய்தது. இவ்வாறாக 1853ம் ஆண்டு மக்காவோ (Macao) ஆயர் ஜீசுப்பே மாத்தா (Giuseppe Mata) ஆண்டகை அவர்கள் திருநிலைகள் (Sacred Orders) வழங்குவதற்காக கோவா செல்லும் வழியில் கொழும்பில் சில நாட்கள் தரித்துச் சென்றார். கொழும்பில் இவரை பிரச்சினைக்குரிய ஒருவராகிய வைத்தியக் கலாநிதி மிஸ்ஸோ (Dr.Misso) வரவேற்றார். (இவர் பொதுநிலையினருள் பிரிவினையைத் தூண்டி வந்த குருக்களின் முன்னணி ஆதரவாளர். பிரிவினை மோசமடைந்தமைக்கு இவரும் ஒரு முக்கிய காரணராக இருந்தார்). மேற்படி ஆயர் கொழும்பு திருத்தூது முதல்வரின் அனுமதியின்றி பிரிவினைவாதிகள் குழுமியிருந்த சிற்றாலயத்தில் 50பேருக்கு உறுதிப்பூசுதல் திருவருட்சாதனத்தை வழங்கினார். இது போன்ற முறையற்ற செயல்களுக்காக இவர் ரோமைத் திருப்பீடத்தின் வன்மையான கண்டனத்திற்குட்பட்டாராயினும், இவரது செயல்கள் கொழும்பிலும், யாழ்ப்பாணத்திலும் இருந்த பிரிவினைவாத சக்திகளுக்கு உற்சாகமளிப்பவையாகவிருந்தன. குறிப்பாக வடக்கில் இவர்கள் வீடுவீடாகச் சென்று ஆயர் பெற்றக்கீனிக்கும் மற்றும் இங்கு பணியாற்றிக் கொண்டிருந்த ஐரோப்பிய மறைப்பணியாளர்க்கும் எதிராக மக்களைத் தூண்டிவிட்டுக் கொண்டிருந்தனர் - ஐரோப்பிய மறைப்பணியாளர்கள் எங்களுக்கு என்ன செய்துவிட்டார்கள்? அவர்களுக்கு எங்களுடைய பாரம்பரியம், பண்பாடு, பழக்கவழக்கங்கள் மட்டில் எவ்வித அக்கறையுமில்லை. அவர்கள் எங்கள் மீது அதிகாரம் செலுத்துவதில் மட்டுமே குறியாக உள்ளார்கள். ஆயர் பெற்றக்கீனியவர்கள் டொரோணாவின் பட்டம் சார் ஆயர் (titular Bishop of Torona) மட்டுமே. (திருத்தூது மாவட்டத்தின் ஆயராக ஒருவர் ஏற்படுத்தப்படும் போது அவருக்குப் பெயரளவில் முன்னர் பலவருடங்களுக்கு முன் மறைவட்டமாக இருந்து தற்போது வழக்கிழந்து போயிருக்கும் பழமை வாய்ந்த ஒரு மறைமாவட்டத்தின் பெயர் ஒதுக்கப்படும்.) எனவே ஆயர் பெற்றக்கீனிக்கு இருக்கவேண்டியதொரு மறை மாவட்டம் இப்படியாக முன்னர் திருஅவையில் பல வருடங்களுக்கு முன் ஒரு ஆயரின் கீழ் இருந்து செயற்பட்ட மறைமாவட்டத்தின் பெயர் வழங்கப்பட்டிருந்தது. இப்படியாகக் கெடுமதி கொண்ட பரப்புரைகள் ஆயர் பெற்றக்கீனிக்கும் அவரின் பராமரிப்பின் கீழ் பணியாற்றிக் கொண்டிருந்த ஐரோப்பிய குருக்களுக்கு எதிராக கட்டவிழ்த்து விடப்பட்டன.

இந்நிலையில் இரு எதிர் அணிகளாக ஒருபுறம் பிரிவினை வாதக்குருக்கள் சிலரும் அவரது ஆதரவாளர்களும் மறுபுறம் ஆயர் பெற்றக்கீனி, குருமுதல்வர் செமேரியா அடிகள் மற்றும் அமலமரித் தியாகிகள், ஐரோப்பியக் குருக்களும் வார்த்தைப் போரில் ஈடுபட்டு முரண்பட்டுக்கொண்டு நின்றனர். இந்தக்கட்டத்தில் ஆயர் பெற்றக்கீனிக்கும், குருமுதல்வர் செமேரியா அடிகளுக்கும் இடறல் நிலை மோசமாவதைத்

**அருட்பணி S.V.B. மங்களராஜா**

தடுக்க இரு தெரிவுகள் இருந்தன. அடைக்கல மாதா கோயிலில் அடாத்தாக நிலை கொண்டிருந்த பிரிவினைவாதக் குருவை வெளியேற்ற ஒன்றில் வன்முறையைப் பிரயோகிக்கலாம் அல்லது சட்டப்படி அவரை வெளியேற்ற முயலலாம். ஆயர் பெற்றக்கீனிக்கு முதலாவது தெரிவு விரைவானதும் வினைத்திறனுள்ளதாகவும் தென்பட்டது. அப்படியானால் பிரிவினைவாதக்குருவை வலுக்கட்டாயமாக வெளியேற்றுவதானால் இதில் ஈடுபடும் குழுவுக்குத்தாமே தலைமை தாங்க வேண்டிவரும் என்றும் இதுபோன்றதொரு செயற்பாட்டில் ஈடுபட அவர் சிறிதும் விரும்பவில்லை. செமேரியா அடிகளின் கருத்தின்படி தாமே (ஆயர் பெற்றக்கீனி அணியினர்) சட்டப்படியான இறைமக்களின் மேய்ப்பர்கள் என்னும் வழக்கு என்று வரும் போது தமக்குச்சார்பாகவே தீர்ப்பு வரும் என்றும் எண்ணி இரண்டாவது தெரிவையே சார்ந்திருந்தார். இறுதியில் பிரிவினைவாதக் குரு சட்டத்திற்குப் புறம்பான முறையில் யாழ் அடைக்கல மாதா கோயிலில் நிலை கொண்டுள்ளார் என்றும் அவரை வெளியேற்ற வேண்டும் என்றும் ஆயர் பெற்றக்கீனியை வழக்குத் தொடுநராகக் கொண்டு வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது. இவ்வழக்கும் முடிந்து பிரிவினைவாதக் குருவை வெளியேற்ற 4 வருடங்கள் எடுத்தன. (தொடரும்....)

# மண்டைதீவு புனித பேதுருவானவர் பங்கில் பெந்தேகோஸ்து அருள்மழை

"இறைவன் எம்மைச் சந்திக்கும்
புனித காலமே
புது வாழ்வு பெற்றிட உளமாற்றம்
காண்போமே.."

அன்று மண்டைதீவு புனித பேதுருவானவர் ஆலய பங்குச் சூழல் முழுவதுமே விழாக்கோலம் பூண்டிருந்தது. வர்ணக்கொடிகள் காற்றில் படபடக்க "உலகிற்கு ஒளி நீங்கள்" என்ற இறைவார்த்தையுடன் "மகா ஞானொடுக்கம் - 2018" என்ற வாசகங்களைத் தாங்கிய பதாகைகள் பிரதான இடங்களில் காட்சியளித்தன. பங்கு முழுவதுமே எழுச்சிக் கோலம் பூண்டிருந்தது. ஆம். எமது பங்கில் அருள்மழை பொழிவதற்கான அடையாளங்களாக இவையெல்லாம் தோன்றின. ஞாயிறு காலை 6.00 மணி. புனித பேதுருவானவர் ஆலய அருட்பணி சபையினரால் பரிசுத்த வேதாகமமும், நற்கருணைப் பேழைத் திறப்பும் பவனியாக எடுத்துவரப்பட்டு, மகா ஞானொடுக்கத்தின் தலைவரான அமலமரித் தியாகிகளின் வவுனியா உரைஞர்கள் குழுமத்தைச் சேர்ந்த அருட்பணி செலஸ்ரின் அடிகளாரிடம் ஒப்படைக்கப்பட்டதைத் தொடர்ந்து, ஆலய முன்றலில் புனித அன்னை மரியாள், புனித பேதுருவானவர் மற்றும் அமலமரித் தியாகிகள் கொடிகள் ஏற்றி வைக்கப்பட்டு, அமலமரித் தியாகிகள் சபைக் குருக்களின் கூட்டுத் திருப்பலியுடன் மண்டைதீவு புனித பேதுருவானவர் பங்கிற்கான மகாஞானொடுக்கம் ஆரம்பமானது.

முதல் ஐந்து நாட்களும் காலை திருப்பலியைத் தொடர்ந்து நற்கருணை எழுந்தேற்றம் செய்யப்பட்டு, மாலை திருச்செபமாலையைத் தொடர்ந்து நற்கருணை ஆசீருடன் நான்கு வலயங்களாகப் பிரிக்கப்பட்ட பகுதிகளில் உள்ள வீடுகளுக்கு வழிகாட்டல் குழுக்களின் உதவிகளுடன் அருட்பணியாளர் சென்று ஒவ்வொரு குடும்பமாகச் சந்தித்து உரையாடினார்கள். குடும்பங்களில் இருக்கும் பிணக்குகளைக் கண்டுகொண்டு தீர்த்து வைத்தனர். அருட்சாதனங்கள் பெறாதவர்களை இனங்கண்டு, அவர்கள் அருட்சாதனங்களைப் பெறுவதற்கு முன் ஆயத்தமாக வகுப்புக்களை நடாத்தினர். பங்கில் உள்ள அனைத்து குடும்பங்களுக்கும் சென்று அனைவரும்



அன்புறவுடனும் ஒற்றுமையுடனும் வாழ அறிவுரைகள் வழங்கினர். அடுத்த ஐந்து நாட்களும் பகல் வேளைகளில் பீடப்பணியாளர்கள், மறையாசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள். சிறுவர்கள், முதியோர்கள், இளையோர்கள் என்று தனித்தனியான கருத்தமர்வுகளும், திருவிவிலியம் சார்ந்த கருத்தமர்வும் இன்னும் குடிபோதை தொடர்பான கருத்தமர்வுகள் என்பவற்றுடன், மாலை சமநேரத்தில் நான்கு வலயங்களிலும் திருப்பலிகள் ஒப்புக்கொடுக்கப்பட்டு சிறுவர்கள். இளையோர்கள், பெற்றோர்கள், முதியவர்கள், குடும்பங்கள் என்று ஒவ்வொருநாளும் ஒவ்வொருவருக்காக செபித்தது மிகவும் சிறப்பானதொன்றாகும்.

மண்டைதீவிலிருந்து சாட்டி சிந்தாத்திரை அன்னையின் யாத்திரை ஸ்தலத்திற்கு பாதயாத்திரையாக சிறுவர்கள் முதல் முதியவர்கள் வரைசென்று வழிபாடுகளை நடாத்தியதுடன கருத்துரைளும், ஒப்புரவு அருட்சாதனமும் வழங்கப்பட்டது. ஒருநாள் முழுவதுமான இந்த வழிபாடானது மனமாற்றத்திற்கான ஒருநாளாக அனைவருக்கும் அமைந்திருந்தது குறிப்பிடத்தக்கது. எமது பங்கின் நலன் வேண்டி, பங்கின் ஆரம்ப எல்லையில் ஆரம்பமாகிய அன்னை மரியாளின் திருச்சொரூபப் பவனி கடற்கரையை வந்தடைந்து, அங்கு திருப்பலியும், அன்னையின் ஆசீரும் வழங்கப்பட்டது. பிறிதொருநாள் தொழில் வளம் வேண்டி கடற்கரையில் திருப்பலியைத் தொடர்ந்து பங்கின் மூலைமுடுக்குகள் எல்லாம் நற்கருணை ஆண்டவர் பவனியாக எடுத்துவரப்பட்டு, மூன்று இடங்களில் சிறப்பாக அமைக்கப்பட்ட இடங்களில் தரித்து, ஆசீர் வழங்கி, இறுதியாக ஆலயத்தில் வழிபாடுகள் நடைபெற்றன.

இறுதி வாரத்தில் சிறப்பு வழிபாடுகளாக குழந்தைகள் தினம், இளையோர் தினம், குடும்பங்கள் தினம், அருட்சாதனக் கொண்டாட்டம், ஒப்புரவுதினம், நன்றி நவிலல் வழிபாடுகள் என்று எம் வாழ்வைப் புதிப்பிக்க இம் மகா ஞானொடுக்கம் வழிவகுத்தது.

அருட்சாதனக் கொண்டாட்டம் வழியாக திருமுழுக்கு, முதல்நன்மை, உறுதி பூசுதல், திருமணம் போன்ற அருட்சாதனங்களைப் பெறாதவர்களுக்கு, அருட்சாதனங்கள் வழங்கியதனூடாக, இருளில் வாழ்ந்த மக்கள் ஒளியில் வாழ வழியமைத்துக்கொடுக்கப்பட்டது. அன்றைய நாளே எம்மையெல்லாம் மிகவும் தொட்ட ஒப்புரவு- அன்பியப் பகிர்வு. பல ஆண்டுகளாக ஒருவரோடொருவர் கதைக்காமல், உறவாடாமல் இருந்த பலகுடும்பங்கள், சகோதரர்கள், முழுமையாக மனமாற்றம் பெற்று, ஒப்புரவு அருட்சாதனத்தைப் பெற்றுக்கொண்டது மாத்திரம் அல்லாமல், தங்களின் ஒப்புரவின் அடையாளமாக ஒருவருக்கொருவர் உணவூட்டி மகிழ்ந்தது அனைவர் மனங்களையும் நெகிழச் செய்த ஒரு நிகழ்வாகும்.

எம் பங்கிலே முதன்முறையாக தூய ஆவியானவரின் திருவிழிப்பு மாலை 7.00 - அதிகாலை 5.00 மணிவரை வழிபாடுகள் நிகழ்ந்தேறியது வரலாற்றில் குறிப்பிடத்தக்கது. ஏறக்குறைய பத்துக்கும் மேற்பட்ட குருக்களும், பத்து அருட்சகோதரர்களும் இந்நிகழ்வை மிகவும் பக்தி சிரத்தையுடன் செய்திருந்தார்கள். ஏறக்குறைய 21 நாட்கள் நடைபெற்ற இம் மகாஞானொடுக்க நாட்களுக்காக ஏற்கனவே 4 ஞாயிறு தினங்கள் முன்னதாக எம் பங்கிற்கு வருகை தந்து முன் ஆயத்த நிகழ்வுகளை மேற்கொண்டார்கள். சிறப்பாக கருத்தரங்கும் தியானமும் எம் பங்கின் இளையோருக்கு சாட்டித் திருத்தலத்தில் ஒழுங்கமைக்கப்பட்டு, நாள்முழுவதும் வழங்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

காலை 5.45 என்றவுடன் காலைச் செபமும் , நற்சிந்தைனைகளும், அருள் மிகு திரு இசையும் மனதிற்கு இதமாக காலையில் என்றும் எம்மை எழுப்பி விடும். இறுதி நாளான 27.05.2018 அன்று காலை திருப்பலியில் புனித பேதுருவானவர் ஆலய பங்கு அருட்பணிசபையினர் மற்றும் வழிகாட்டல் குழுவினர் தீபம் ஏந்தி பவனியாகவர, தீவக மறைக்கோட்ட குருமுதல்வரும் மண்டைதீவு-அல்லைப்பிட்டி பங்குத் தந்தையுமான அருட்பணி மனுவேற்பிள்ளை டேவிட் அடிகளாரிடம் பரிசுத்த வேதாகமத்தையும், நற்கருணைப் பேழைத் திறப்பினையும் மகாஞானொடுக்கக் குழுவினர் ஒப்படைக்க, அவர் அருட்பணி சபையினரிடம் ஒப்படைத்தார். தொடர்ந்து அமலமரித் தியாகிகள் சபைக் குருக்கள் அனைவரும் இணைந்து தமது திருச்சிலுவைகளினால் பங்குமக்கள் அனைவருக்கும் ஆசீர் வழங்கி, மகா ஞானொடுக்கத்தின் நினைவாக அமைக்கப்பட்ட நினைவிடத்தினையும் திரைநீக்கம் செய்துவைத்தனர்.

இம் மகாஞானொடுக்கம் பல நன்மைத்தனங்களையும் பல மாற்றங்களை யும் எம் மக்களிடையே உண்டுபண்ணியுள்ளதை உணர முடிகிறது. "புதிதாய் வாழ்வோம்" என்ற கருப்பொருளுடன் நடந்து முடிந்த மேய்ப்புப்பணி மாநாட்டின் சில தீர்மானங்கள் இங்கு நிறைவேற்றப்பட்டமை சிறப்பம்சமாகும்.

# 50வது பொன்விழா



50th ANNIVERSARY CELEBRATION

17.08.2018

## திரு.திருமதி. யேசுதாசன் பரமேஸ்வரி

திகதியாம் பதினேழதிலே மாதமாம் எட்டதிலே திருமணநாள் காண் விழாநாயகர்களே
இறைவன் இணைத்திட்ட திருமணமெனும் நல் உறவதிலே
அன்பெனும் பண்பதில் இல்லறம் தினம் செழிக்க உம் மணவாழ்வு கண்டு வியந்த கண்கள் ஆயிரமன்றோ
புதுமைத் தாயவளின் இடைவிடா பரிந்துரை வேண்டுவீர். தினம் ஈன்றெடுத்த மழலைகள் யாம்
அன்னையவள் அன்பினை சுவைத்திட பணித்தீர்
பண்பெனும் பாரிய ஒளியில் புவிதனில் சிறந்து
பாசப்பறவைகளாய் எமைப்படைத்திட அம்மை அப்பனே
வாழ்க வாழ்க வாழ்கவென வாழ்த்துகின்றோம்.
காலங்கள் கானல் நீராய் கரைந்தோடினும்
கனவுகள் நனவாக மாற்றம் பெறினும்
நீவிர் உம் மழலைகள் எமை தாலாட்டிய தாலாட்டதுவோ இன்னும் ஒலிக்கின்றது.
எம் பருவங்கள் கடந்தும் அன்னைக்கும் தந்தைக்கும் தரணி போற்றிடும் இந்நன்நாளில்
இறைவன் பதம் பணித்தோம் உம்மவர் ஆயுள் நீடித்திட
ஐந்து அருள்களை கருவறையில் சுமந்திட்ட தாயே.
கருவறை சுமையோடு மனையாளை கண்களில் சுமந்த தந்தையே
வாழ்க வாழ்க வாழ்கவென வாழ்த்துகிறோம் வாயார
புலம்பெயர் தேசத்தில் பொன்விழா காண் ஒளிச்சுடரே உம்மை வாழ்த்திட வார்த்தைகள்
போதாதென்றோ உம்மவர் போல் உயிர்மூச்சை தந்திட்டீர் உம் பண்புகளால் உறவுகளை சுவைக்கிறோம்.
இன்று கவிதைகளால் வழத்திட முடியா காவிய சிற்பங்களே
பொன்விழா நாயகர்களே வாழ்க வாழ்க வாழ்கவென வாழ்த்துகிறோம்.
நன்றி என்ற பூக்கள் மனதால் மகிழ்வாய் தூவி நன்றி நன்றி நன்றி நன்றியென நாவால் பாடுகிறோம்.
பொன்விழா நாயகர்களே அம்மா அப்பா ஓயாமல் வாழ்த்துகின்றோம்.
வாழ்க பல்லாண்டு நீடூழி

அன்புடன் பிள்ளைகள்.
அருள்ஜெசல், அருள் செல்வி, அருள்மதி,
அருள் மணி [ஜெர்மனி],
அருள் காந்தி [அடம்பன்]

# மானிப்பாய் புனித அன்னாள் ஆலய நவநாள் தியானம்

மானிப்பாய் புனித அன்னாள் ஆலய திருவிழா கடந்த மாத இறுதிப் பகுதியில் அருட்பணி ஸ்ரனி அன்ரனி (அமதி) அடிகளார் தலைமையில் திருவிழா திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு, வெகு சிறப்பாக நிறைவேறியது. 'நவநாள் தியானங்களை அருட்பணி அன்ரனி பெனாண்டோ CMF அடிகளார் வழங்கினார்.

'முழு உண்மைக்கு வழிநடத்தும் தூய ஆவியார்', 'நீ எனக்கு உரியவன்', 'விழிப்பாய் இருந்து நம்பிக்கையை காத்துக்கொள்வோம்', 'மரியா தீர்மானம் எடுப்பதில் எடுத்துக்காட்டு', 'கடவுள் விரும்பும் குடும்பம்', 'உங்களைத் தூய்மையாக்குங்கள் கடவுள் வியத்தகு செயல்களைச் செய்வார்', 'என் சீடனாக இரு', 'அவரது செல்வாக்குப் பெருக வேண்டும்' முதலான கருப்பொருள்களில் தியான நிகழ்வு வழிநடத்தப்பட்டது.

பங்குத்தந்தை அருட்பணி S.J.Q.ஜெயரஞ்சன் அடிகளார் தலைமையில் திருவிழாவுக்கான அனைத்து ஏற்பாடுகளும் சிறப்பாக மேற்கொள்ளப்பட்டது.

### நீர்வேலி பரலோகமாதா ....

(1ம் பக்கத் தொடர்ச்சி)

அன்னை மரியாவின் பண்புகளைக் கொண்டு மரியாயின் சேனை ஊழியர்கள் பிறரின் தேவைகளை உய்த்துணர்ந்து தன்னலம் அற்ற இரக்கச் செயல்களில் விரைந்து செயற்பட வேண்டுமென அருட்பணி அமல்ராஜ் அடிகளார் இதன்போது கேட்டுக்கொண்டார்.

உரும்பிராய்ப் பங்கில் மரியாயின் சேனையை ஆரம்பித்து வைத்து மறைந்த முன்னாள் பங்குத்தந்தை அருட்பணி பெனட் கொன்ரன்ரைன் அடிகளாரின் திருவுருவப் படத்திற்கு இந்நிகழ்வில் மலர்மாலை அணிவிக்கப்பட்டு அஞ்சலி செலுத்தப்பட்டது.

யாழ். கொமிற்சியத் தலைவர் திரு.மரியகருணைநாயகம் அவர்களும் இந்நிகழ்வில் இணைந்து கொண்டார். கலைநிகழ்வுகளுடன் விழா சிறப்புற நிறைவேறியது.

### குடும்பங்களும், புதிதாக......

(1ம் பக்கத் தொடர்ச்சி)

குடும்பங்கள் மாண்பிழக்கும் போது சமூகம் தன் மாண்பை இழந்துவிடுகிறது.

திருமணம் என்னும் திருவருட்சாதனத்தின்போது நாம் கொடுக்கின்ற வாக்குறுதிகளை மெய்ப்பிக்காது பொய்ப்பித்து வருவதால் பல குடும்பங்களில் ஒற்றுமையின்மைகளும், பிரிவுகள் பிளவுகளும் ஏற்பட்டு பல்வேறு வகையான சமூகச் சீரழிவுகளுக்குக் காரணமாகிறது.

கடவுள் இணைத்த புனிதமான குடும்ப வாழ்வை எவரும் பிரிக்க இடமளிக்கக்கூடாது. அன்னை மரியாளின் திருக்குடும்ப வாழ்வு எம் எல்லோருக்கும் முன்மாதிரியாகத் திகழவேண்டும் எனவும் தெரிவித்த ஆயர் அவர்கள் பொய், களவு முதலான தீமை பயக்கும் குணங்கள் இன்று எம் மத்தியில் பெருகி வருவதாகவும், அனைவரும் நேர்மையுடனும் இதய சுத்தியுடனும் செயலாற்ற வேண்டும் எனவும் கேட்டுக்கொண்டார்.

**புதுப்பொலிவுடன் பாதுகாவலன் மண்டபம்**
உங்களது மங்கலகரமான நிகழ்வுகளை உறவுகளுடன் கொண்டாடி மகிழ பாதுகாவலன் மண்டபம் குறைந்த கட்டணத்தில் அனைத்து வசதிகளுடனும் வரவேற்று நிற்கின்றது.

**கத்தோலிக்க அச்சகத்தில் விற்பனைக்கு**

- நற்கருணைப் பவனிக்கு, திருச்சொரூபப் பவனிக்குப் பயன்படுத்தக்கூடிய அழகிய வர்ணக் குடைகள்
- அழகிய வர்ண மின் மெழுகுவர்த்திகள்
- முதன்நன்மை சான்றிதழ்கள் மற்றும் மோட்சபாதை என்பன மலிவு விற்பனையில் பெற்றுக்கொள்ளலாம்.

### கரித்தாஸ் நிறுவனத்தின்....

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கரித்தாசின் சமாதானப் பாத யாத்திரையும், கண்காட்சியும், குடும்ப ஒன்றுகூடலும் மறைமாவட்ட இயக்குநரான அருட்பணி யூஜின் பிரான்சிஸ் அடிகளாரின் வழிகாட்டலுடனும், தேசிய நிறுவனத்தின் செடெக் பங்களிப்புடனும் நடைபெற்றது.

இந்நிகழ்வில் இலங்கையின் கரிதாஸ் செடெக் இயக்குநர் அருட்பணி மகேந்திர குணதிலக அடிகளாரும் பங்குகொண்டு சிறப்பித்தார்.

### நாட்டில் நல்லிணக்கத்தை...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கிறிஸ்தவ அமைச்சினால் வழங்கப்பட்ட நிதி அன்பளிப்பினை பிரதமர் அவர்கள் மன்னார் மறைமாவட்ட ஆயர் பேரருட்கலாநிதி இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை அவர்களிடம் கையளித்தார்.

### அரியாலை கிழக்கு அன்னை வேளாங்கண்ணி ஆலயத் திருவிழா

அரியாலை கிழக்கு அன்னை வேளாங்கண்ணி ஆலயத் திருவிழா எதிர்வரும் 25.08.2018 சனிக்கிழமை காலை 7.00 மணிக்கு திருச்செபமாலையுடன் ஆரம்பமாகும்.

**21 வது வருட நினைவு அஞ்சலி**



அமரர்
**J.D மோசஸ்**
மலர்வு - 03.07.1922
உதிர்வு - 16.08.1997

**3 வது வருட நினைவு அஞ்சலி**



அமரர்
**மோசஸ் ஜெயராசா**
மலர்வு - 14.12.1953
உதிர்வு - 04.04.2015

ஆண்டு பல கடந்திடினும் ஆறுமோ எம் நெஞ்சங்கள்
என்னிடம் நம்பிக்கை கொள்பவன் இறப்பினும் வாழ்வான்

இல 75 பழம் வீதி
ஆறுகால்மடம் ,ஆனைக்கோட்டை

பிரிவால் துயருறும்
சிவமலர் மகிழ்ராஜதுரை
இன்பமலர் ஜெயராஜ்

AD/67

# பிறப்பின் அறுபதும் இறப்பின் மூன்றும்

பிறப்பு 23 - 08 - 1958



இறப்பு 31 - 08 - 2015

அமரர்
## கொன்சலா புவனராஜேஸ் அமலரட்ணம்
**(ராஜேஸ்)**

" உயிர்ப்பும் உயிரும் நானேஎன்னில் விசுவாசம் கொள்பவன் ஒருபோதும் சாகான்" [அருளப்பர் 11: 25 - 26]

மண்ணுலகில் நீ உதித்த அறுபதாம் அகவையும்
விண்ணுலகில் நீ பிறந்த மூன்றாம் ஆண்டும்
ஆவணித் திங்களில் ஒன்றாக வருவதனால்
இதயம் உடைந்து செந்நீர் சொரியுதம்மா
இயலா நிலையில் நீ இருந்த போது
ஐம்பதை ஒருத்தி கொண்டாட நினைத்தும்
அதற்கு இன்னொருத்தி தடை போட்டதையும்
நினைத்துப் பார்க்கையில் நெஞ்சு விம்முதம்மா
இன்று நீ உயிரொடு எம்மோடு இருந்திருந்தால்
அறுபதாம் பிறந்த நாள் மகிழ்வோடு நடந்திருக்கும்
நீ இல்லாவிட்டாலும் எம்மோடு இருப்பது போல்
எண்ணியே இந்நாளை மகிழ்வோடு நினைக்கிறோம்
விண்ணிலே எம் மீட்பர் கிறிஸ்துவோடு இணைந்து
புனிதர்கள் புடை சூழ்ந்து வாழ்த்துக்கள் கூறிடுவர்
நீ ஈன்ற பிள்ளைகள் நல்வாழ்வு வாழ்வதற்கு
இறைவனிடம் எமக்காய் எப்போதும் பரிந்துரைப்பாய்

இவரின் ஆன்ம இளைப்பாற்றிக்காக 23.08.2018 வியாழக்கிழமை காலை 5.30 மணிக்கு புனித மரியன்னை பேராலயத்திலும் காலை 6.00 மணிக்கு அருள் ஆச்சிரமத்திலும் இரங்கற் திருப்பலிகள் ஒப்புக்கொடுக்கப்படும். 31.08.2018 வெள்ளிக்கிழமை அன்று பின்வரும் ஆலயங்களில் இரங்கற் திருப்பலிகள் ஒப்புக்கொடுக்கப்படும். புனித மரியன்னை பேராலயம் காலை 5.30, அருள் ஆச்சிரமம் காலை 6.00 மணி திருமுழுக்கு யோவான் ஆலயம் சுண்டிக்குளி காலை 5.50 மணி பாஷையூர் புனித அந்தோனியார் ஆலயம் காலை 6.30 மணி குருநகர் புனித யாகப்பர் ஆலயம் காலை 6.00 மணி நல்லூர் ஆசீர்வாதப்பர் ஆலயம் காலை 6.00 மணி, பாண்டியந்தாழ்வு புனித அன்னாள் ஆலயம் காலை 5.45 மணி அத்துடன் மடுத்திருப்பதியிலும் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும்.

பிரிவால் துயருறும்
கணவர், பிள்ளைகள், மருமக்கள்

# விண்ணக வாழ்வில் 23 ஆவது வருட நினைவு

பிறப்பு 10 - 03 - 1934



இறப்பு 24 - 08 - 1995

## அமரர் பாக்கியம் ஞானப்பிரகாசம்

" உயிர்ப்பும் உயிரும் நானே என்னில் விசுவாசம் கொள்பவன் எவனும் ஒருபோதும் சாகான்"
(அருளப்பர் 11: 25-20)

**எம் சர்வேசுரா இவ்வுலகிலிருந்து உம்மிடம் அழைத்துக் கொண்ட திருமதி பாக்கியம் ஞானப்பிரகாசம் அவர்களுக்கு ஆன்ம இளைப்பாற்றுதலைக் கொடுக்கவேண்டுமென்று ஆண்டவரே உம்மை மன்றாடுகின்றோம். ஆண்டவரே இவருக்கு அமைதியின் இடத்தை அளித்தருளும். முடிவில்லாத ஒளி இவருக்குப் பிரகாசிக்கக்கடவது.**

*மகன்: ஞா.விமலதாசன் (கனடா)*
*மகள்: ஜஸ்றினா ஜோர்ஜ் (ஜேர்மனி)*
*மருமகன், மருமகள், பேரப்பிள்ளைகள், சகோதர, சகோதரிகள் மற்றும் உறவினர்*

*ஊர்காவற்றுறை.*

AD-52



தீவக மறைக்கோட்ட பொதுநிலையினர் கழக மாதாந்த ஒன்று கூடல் 11.08.2018 அன்று சின்னமடு செபமாலை அன்னை ஆலயத்தில் நடைபெற்றது. அருட்பணி எரோனியஸ் அடிகளார் இந்நிகழ்வில் வளவாளராகக் கலந்துகொண்டு சிறப்பித்தார்.

## அ.யேசுராசாவின் "நிழல்கள்" நூல் வெளியீடு

அ.யேசுராசா அவர்களின் திரைப்படக் கட்டுரைகள் அடங்கிய "நிழல்கள்" நூல் வெளியீடு 19.08.2018 ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3.45 மணிக்கு பாங்ஷால் வீதி - மவுண்ட் கார்மேல் சந்தி குருநகரில் அமைந்துள்ள கார்மேல் மண்டபத்தில் இடம்பெற்றது.

மருத்துவர் எம்.கே.முருகானந் தன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் நூலுக்கான அறிமுகவுரையை திரு. யோண்சன் ராஜ்குமார் அவர்களும், மதிப்பீட்டுரைகளை சி.சித்திராதரன் அவர்களும் மற்றும் கலாநிதி சி.ரகுராம் அவர்களும் நிகழ்த்தினர்.

நூலாசிரியரால் ஏற்புரை வழங்கப் பட்டது. இந்நிகழ்வுக்கான ஏற்பாடுகளை குருநகர் இளைஞர் கலைக்கழகம் மேற் கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## மடுத்திருத்தல யாத்திரிகர்களுக்காக 300 புதிய தங்குமிட விடுதிகள்

மடுத் திருத்தலத்திற்கு வருகை தரும் யாத்திரிகர்களின் நலன் கருதி இந்தியாவின் நன்கொடையின் மூலம் மடுத்திருத்தலத்தில் 300 வீடுகள் கட்டுவதற்கான ஒப்பந்தம் கொழும்பு, இந்திய உயர் ஸ்தானிகர் காரியாலயத்தில் கைச்சாத்திடப்பட்டது.

இலங்கைக்கான இந்தியத் தூதுவர் டரன்ஜித் சிங் சந்து அவர்களும் சுற்றுலா அபிவிருத்தி மற்றும் கிறிஸ்தவ வெளிவிவகார அமைச்சின் செயலாளர் எசல வீரக்கோன் அவர்களும் இதில் கைச்சாத்திட்டனர்.

மடுத்திருத்தலப் பரிபாலகர் அருட்பணி எமிலினானுஸ்பிள்ளை, இந்தியத் தூதுவர், சுற்றுலா அபிவிருத்தி மற்றும் கிறிஸ்தவ வெளிவிவகார அமைச்சர் ஜோண் அமரதுங்க ஆகியோரும் இந்நிகழ்வில் பங்குபற்றினர்.

மடுத்திருத்தலத்திற்கு சாதாரண நாட்களிலும் திருவிழாக் கலங்களிலும் இலட்சக்கணக்கான மக்கள் மடு அன்னையைத் தரிசித்து ஆசி பெற்று வருவதால் இவர்களுக்கான தங்குமிட விடுதிகள் பெரும் பற்றாக்குறையாகவே அண்மைக்காலம் வரை காணப்பட்டது. இதனால் யாத்திரிகர்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி இருந்த நிலையில் இப்புதிய தங்குமிட விடுதிகள் பெரும் வரப்பிரசாதமாக அமைந்துள்ளது.

## அளம்பில் புனித அந்தோனியார் ஆலய இளையோர் ஒன்றியத்தின் வெளிக்களப் பயணம்



அளம்பில் புனித அந்தோனியார் ஆலய இளையோர் மன்ற உறுப்பினர்கள் பங்குத்தந்தை அருட்பணி M.L.தயாகரன் அடிகளார் மற்றும் யாழ் மறைமாவட்ட இளையோர் ஆணைக்குழு இயக்குநர் அருட்பணி அன்ரனி ஸ்ரீபன் அடிகளார் ஆகியோருடன் இணைந்து திருகோணமலை மறைமாவட்டத்திற்கு கடந்த 11, 12 ஆம் திகதிகளில் வெளிக்களப் பயணம் மேற்கொண்டிருந்தனர்.

திருகோணமலையில் உள்ள வரலாற்று முக்கியத்துவம் பெற்ற இடங்களை இவர்கள் பார்வையிட்டதுடன், கடலோர கலை நிகழ்வுகள் மற்றும் கருத்தரங்குகள் என்பவற்றிலும் பங்குபற்றினர். பாலையூற்றுப் பங்குத்தந்தை அருட்பணி நிதிதாசன் அவர்களின் நெறிப்படுத்தலின் கீழ் அப்பங்கு இளையோருடனான ஒன்றிப்பு நிகழ்வுகளும் இடம்பெற்றன. புனித சதாசகாய மாதா திருவிழாத் திருப்பலியில் இவ்விளையோர்கள் பங்குபற்றியதுடன், திருகோணமலை மறைமாவட்ட ஆயர் மேதகு கிறிஸ்ரியன் நோயல் இம்மானுவேல் ஆண்டகை அவர்களையும் சந்தித்து ஆசீர் பெற்றனர்.

## பொதுநிலையினர் கழக நிதி சேகரிப்பு

யாழ் மறை மாவட்ட பொது நிலையினர் கழகத்திற்கான நிதி சேகரிப்பு தினம் எதிர்வரும் 26.08.2018 ஞாயிறு தினமாகும்.

அச்சடிக்கப்பட்ட கடித உறைகள் அனைத்துப் பங்குகளுக்கும் வழங்கப்பட்டுள்ளது. கழகத்தின் செயற்பாடுகளுக்காக மனமுவந்து உதவி வழங்க முன் வரவும். எதிர்வரும் 14.10.2018 அன்று தேசிய பொது நிலையினர் தினம் அனுஸ்டிக் கப்படவுள்ளமை குறிப் பிடத்தக்கது.

## மரண தண்டனை....

(1ம் பக்கத் தொடர்ச்சி)

இதற்கு இணங்க கத்தோலிக்க திருச்சபையின் நிகழ்கால நிலையும் மற்றும் படிப்பினையாகவும் அமைவது நற்செய்தியில் நிலைத்திருந்து மரண தண்டனையை எக்காரணம் கொண்டும் ஏற்றுக்கொள்ள முடியாது என்பதாகும். இது மனித மாண்புக்கு எதிராக அமைவதோடு திருச்சபையானது மரண தண்டனையை உலகம் பூராகவும் இல்லாதொழிப்பதற்கு விழிப்புணர்வுடன் செயற்படுகின்றது.

எமது திருத்தந்தை போதைப்பொருள் என்னும் விடயத்தை எடுத்து நோக்குவது மனித அடிமைத்தனத்தின் முக்கால நிலையாகவும் புதிய புண்ணாக மாற்றும் சமூகத்தை சீரழிக்கும் நஞ்சாகவும் இருக்கின்றது என்னும் கோணத்தினாலாகும். இதனோடு நாம் போராட வேண்டும். இதனை முழுமையாக இல்லாதொழிக்கவேண்டும். இப்போது இது "போது மெனக் கூறுவதற்கான காலம் வந்துவிட்டது" எனத் தெரிவிக்கின்றார்.

எனவே இந்நிலைக்கு உள்ளாகித் தவிப்பவர்களை இந்நிலையிலிருந்து மீட்டெடுப்பதற்கும் இல்லாதொழிப்பதற்கும் செயற்பாடுகளை மேற்கொள்வதற்கும் கல்வியகங்கள், நிறுவனங்கள் மற்றும் மதத் தலைவர்கள், அரசியல்வாதிகள், பொதுநிலையினர் , அரச சார்பற்ற தேசிய மற்றும் வெளிநாட்டு அமைப்புக்கள், நிறைவேற்று அதிகாரமிக்க சட்டத்துறையினர் அனைவரிடமும் நாம் கேட்டுக்கொள்கின்றோம்.

அண்மைக்காலத்தில் தண்டனைத் தீர்ப்புப் பெற்று சிறைக் கைதிகள் ஆக்கப்பட்ட குற்றவாளிகள் மூலம் தொடர்ச்சியாக சிறைக்கைதிகளாக இருந்த கைதிகள் மேற்கொண்ட போதைப்பொருள் நடவடிக்கைகளை முற்றாக இல்லாதொழிக்க சட்டத்துறையினர் நடவடிக்கைகள் எடுக்கவேண்டும். இதற்கான பொருத்தமான பாதுகாப்பு நடவடிக்கைகளையும் தீர்மானங்களையும் எடுத்தே ஆகவேண்டுமென இலங்கை கத்தோலிக்க ஆயர் பேரவை தனது அறிக்கையில் மேலும் தெரிவித்துள்ளது.

## ஐ.நா.வின் 73 ஆவது பொது அமர்வுக்காக திருப்பீடம் செபம்

ஐக்கிய நாடுகள் நிறுவனத்தின் 73 ஆவது பொது அமர்வு, வருகிற செப்டம்பர் 18ம் தேதி ஆரம்பிக்கப்படவிருப்பதையொட்டி, நியூயோர்க் நகரிலுள்ள, ஐ.நா.வுக்கான திருப்பீட தூதரகம், அதற்கு முந்தைய நாள் மாலையில், செப வழிபாடு ஒன்றை நடத்தவிருப்பதாக அறிவித்துள்ளது.

பிரிந்த கிறிஸ்தவ சபைகள் மற்றும் ஏனைய சமயத் தலைவர்களுடன் நடத்தப்படவிருக்கும் இச்செப வழிபாட்டில் கொலம்பிய ஆயர் பேரவையின் முன்னாள் தலைவரும் கொலம்பிய அமைதி நடவடிக்கையில் பங்கெடுத்த தலைவர்களில் ஒருவருமான பேராயர் Luis Castro Quiroga அவர்கள் தியான சிந்தனைகளை வழங்குவார்.

ஐ.நா.வின் 73 ஆவது பொது அமர்வின் தலைவர் ஐ.நா. பொதுச் செயலர் உட்பட பல முக்கிய தலைவர்களும் இச்செப வழிபாட்டில் கலந்து கொள் வதற்கு அழைக்கப்பட்டுள்ளனர் என அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த 73 ஆவது பொது அமர்வு (UNGA 73), செப்டம்பர் 18 ஆம் திகதியிலிருந்து, 30ம் திகதி வரை நடைபெறும். (Zenit)

**கனவுகளின்றி வருங்கால வாழ்வில்லை**

இத்தாலிய மறைமாவட்டங்களின் இளையோருக்கென இத்தாலிய ஆயர் பேரவையால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த கூட்டத்தில் பங்குபெற்றோருடன் இச்சனிக்கிழமை இரவு செபவழிபாட்டில் கலந்துகொண்டு உரையாற்றிய திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், வருங்கால கனவுகளை செயல்படுத்துவதில் இளையோர் கடைபிடிக்க வேண்டிய வழிமுறைகள் குறித்து எடுத்துரைத் தார்.

உரோம் நகரின் சிர்கோ மாஸ்ஸிமோ திடலில் குழுமியிருந்த 70,000 இற்கும் அதிகமான இத்தாலிய இளையோருக்கு உரையாற்றிய திருத் தந்தை, அவர்களுள் நான்கு பேர் எழுப்பிய கேள்விகளுக்குப் பதிலளிக்கும்போது இவ்வாறு கூறினார்.

ஒக்டோபரில் வத்திக்கானில் இடம்பெறவிருக் கும் இளையோர் குறித்த உலக ஆயர்கள் மாநாட் டிற்கும், ஜனவரியில் பனாமாவில் இடம்பெற வுள்ள உலக இளையோர் நாள் கொண்டாட்டங் களுக்கும் தயாரிப்பாக, ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இத்தாலிய இளையோர் கூட்டத்தில் கலந்து கொண்டோருடன் உரையாடிய திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், கனவுகளை நாம் பாது காக்க வேண்டியது அவசியம், ஏனெனில் அவை வருங்காலத்தை வடிவமைப்பதற்கு இன்றியமை யாதவை என்றும், அந்தக் கனவுகள் எங்கிருந்து வருகின்றன என்ற கேள்வியை கேட்க வேண்டி யது அவசியம் என்றும் கூறினார்.

விவிலியத்தில் கூறப்பட்டுள்ள கனவுகள், அனைவரையும் உள்ளடக்கியதாக உள்ளதால் அவை மிக உயரிய இடத்தைப் பெறுகின்றன என்று கூறிய திருத்தந்தை, அவைகளை யொத்ததாக நம் கனவுகளும் இருக்கவேண்டும் எனக் கூறினார்.

உயரிய கனவுகள் என்பவை, மற்றவர்களோடு பகிர்வதையும், புதிய வாழ்வை உருவாக்குவதையும் உள்ளடக்கியதாக இருக்க வேண்டும் என்ற விண்ணப்பத்தையும் முன்வைத்த திருத் தந்தை பிரான்சிஸ் அவர்கள், கனவு காணும் சுதந்திரம் நம்மிடமிருந்து பறிக்கப்படும்போது, நாம் முன்னோக்கிச் செல்வது தடைபடுவதுடன், நம்மிலும் பிறரிலும் வளர்ச்சியை ஊக்குவிப்பதற் கான அன்பும் குறைபடுகிறது என்றார்.

'விசுவாசமும், திருஅவைக்குள் வாழ்வின் அர்த்தத்தைத் தேடுதலும்' என்பது குறித்து ஓர் இளைஞர் எழுப்பிய கேள்விக்குப் பதிலளித்த திருத் தந்தை, வார்த்தைகளால் அல்ல மாறாக வாழ்க்கை நடவடிக்கைகளால் நம் விசுவாசத்திற்கு சாட்சியாக விளங்க வேண்டியதன்அவசியத்தைவலியுறுத் தினார். சாட்சிய வாழ்வு இல்லாத திருஅவை, வெறும் புகைக்கு ஒப்பாகும் என்பதையும் எடுத்து ரைத்தார் திருத்தந்தை பிரான்சிஸ்.

இப் பத்திரிகை புனித வளன் கத்தோலிக்க அச்சக முகாமையாளரால் யாழ்ப்பாணம் 360, பிரதான வீதியில் அமைந்துள்ள அவர்களது அச்சகத்தில் 2018 ஆம் ஆண்டு வெளியிடப்பட்டுள்ளது.